I.N.A.

Q.87 M582
N.1
1992

73
4.13

கடவுள் துணை.

வேதசாக்ஷியாகிய

# அர்ச். பிலோமேனம்மாள் நாடக

# டிராமா.

இஃது

பெங்களூரில் வசித்துக் காலஞ்சென்ற
ச. மரியான் பண்டிதரவர்களின்
புதல்வரும்,
ஜெனிக்கிலாள், தேக்கிலம்மன், பர்மா சண்டை,
இவைகளை விலாசமாகப் பாடினவரும்,
மைசூர் சாம்ராஜ் மரணத்தின்மீது
ஒப்பாரி சொல்லி பரிசு பெற்றவரும்,
ஷை யூர் குவலையானந்த இலக்கண கோர்வை
சாலைத் தமிழ் சங்க வித்வானுமாகிய,
ச. ம. சவரியப்ப தாசரவர்களாலியற்றப்பட்டு

சென்னை மஹா விகடதூதன் பத்திராதிபர்,
ஸ்ரீமான். பா. அ. அ. இராஜேந்திரம் பிள்ளை யவர்களால்
கண்ணோட்டமிட[illegible]

மெர்குரி பிரஸ், மஹா விகடதூதன் [illegible]
அச்சிடப்பட்டது.

சென்னை 1913.

Registered Copyright.

0-,892M3R2,V
N13
139922

வேதசாக்ஷியாகிய

# அர்ச். பிலோமேனம்மாள் நாடகம்.

73
4·13

## பிதாஸ்துதி.

### விருத்தம்.

ஆதியே யரூபாரூபா அளவிலா கிருபைபூண்ட
சோதியே உனைநினைந்து சொல்லுவேன் பிலோமனுளின்
நீதிசேர் கதையைப்பற்றி நீணிலம் பரவவேண்டி
தீதனு காமற்காரும் திருப்பதம் போற்றிபோற்றி.

## சுதனுனவர் ஸ்துதி.

ஆதியி லேவைசெய்த அழிவினை யதனைக்கொய்ய
நீதிசேர் மனுவாய்வந்து நிந்தைகள் பலவும்பட்டு
சாதித்து வுயிரைவிட்டுச் சாந்தமா யெழுந்துபின்பு
போதித்து வானஞ்சென்ற பிரபுவைத் தோத்தரித்தேன்.

## தேவமாதா ஸ்துதி.

கன்னியர்க் கரசியேமெய் கர்த்தனின் தாயேதூய
சென்னியி லுடுமுடித்தும் திகழ்பிறை பதமிகித்தும்
மன்னிய கதிரோன்றன்னை வளம்பெறப் போர்த்திநின்ற
அன்னைமா மரியேஉந்தன் அடியினை போற்றிபோற்றி.

## சூசைமாமுனிவர் வணக்கம்.

கையில்பூங் கோல்மலர்ந்து கற்பமர் தாய்மரிக்கு
வையகங் காவலாகி வானவன் தனையேயேந்தி
நையிலாத் துணையே யிந்த நன்னவ சரித்திரத்தைச்
சையற படித்தோர்க்கெல்லாம் சார்ந்துமே துணை செய்வாயே.

## அவையடக்கம்

பத்தியார் தமிழைக்கற்ற பாவலர் நடுவிலிந்த
பித்தனு முளரிவிட்டேன் பிழையதி லனந்தமுண்டேல்
தித்திக்குஞ் சரிதைதன்னை திரட்டியே யெடுத்துக்கொண்டு
மத்திக்குஞ் சக்கைதன்னை மாண்புள்ளோ ரெறிவர்தானே.

ஒருவிகற்ப வெண்பா.

கன்னிமரி தாய்மீது கண்ணே கவலைவைத்து
பன்னிவுயிர் விட்டவோர் பத்தினியாம்—சென்னியெனத்
துன்னும் பிலோமனம்மைத் தூய்சரித மாபூவில்
ன்னய முடன் நவிலுவாம்.

பிலோமனுள் தங்கையாகிய

### கிரேஸியான் கோலுவுக்கு வருகிற தரு.

(வனதேவதையே—என்கிற மெட்டு.)

பல்லவி.

நினைவே வலுவாய் நிறைந்தேன் எனவே
பணிந்தேன் பகவான் பாத மிரைந்தே

அநுபல்லவி.

எனது சலங்கழித்து இவ்வய தாகியும்
ம[illegible]வொரு மகவைப் பெறுதபோனேன் (நினை)

139922



வசனம்.

கேளும் பெண்ணே கிரேசியாளே, நானுன்னைக் கலியாணம் செய்து இத்தனை வருஷம் நிறைவேறி விருத்தராகி விட்டோம். இதுவரைக்கும் நம் நாட்டைச் செங்கோலோச்சவும், நமது வம்சாவளியை விர்த்திப்படுத்தி விளக்கவும் ஒரு புத்திரசந்தான மில்லையே சகியே.

### கிரேஸியாள் புலம்பல் தரு.

(தங்கை யெங்குதான்—என்கிற மெட்டு, நல்லதங்காள் சரித்திரம்)

பல்லவி.

பெண்ணி லென்னைப்போல் பாவியுண்டோ—என்னை
பிரீதியாய் பார்ப்பா ருண்டோ

சரணங்கள்.

பிள்ளையில்லா மலடியென்று பெரியோரெல்லாம் பேசலானார்
பேதையாகினேன்—மதி வாதையாகினேன்
கோதை யென்செய்வேன் சதிக்கார தெய்வமே(பெ)

என்முகத்திலே விழித்தோர் ஈனவாக்கா லென்னைசொல்ல
இருதிகொண்டேனே—கெடும் மருதி பூண்டேனே
அருதியானனே என் சுருதிக்கோனனே(பெ)

வசனம்.

ஹரி ஹரி ராமச்சந்திரா எனக்கு ஒரு புத்திரசந்தானந் தரக் கூடாதா? பார்ப்போர்கள் எல்லாம் என்னைப் பழிக்கும்படி செய்தாயே பரமேசா.

கிரேசிராஜன் வசனம்.

கேளும் என் சகியே உன் அதிஷ்டம் இப்படியிருந்தால் விசனப்பட்டுங் காரியமில்லை. நாம் நமது இஷ்ட தேவதையாகிய

D-7392 MSR 2,V
N13

ஸ்ரீ கிருஷ்ணதேவருக்குப் பூசை நைவேத்தியம் செய்து முடித்தால் அந்த பகவான் நமக்குப் புத்திரபாக்கியம் அவசியம் தருவார் எழுந்திராய் பெண்ணே.

பொது-வசனம்.

அகோதெப்படி யென்றால் கிரேசியானும், கிரேசியாளும் ஸ்ரீ கிருஷ்ணதேவருக்குப் பூசை செய்கிற விதங் காண்க.

## பூசைத் தரு.

(அரகரா சங்கரா—என்கிறமெட்டு, தேவ சகாய பிள்ளை நாடகம்.)

கண்ணிகள்.

ஆலிலைமேல் துயின்ற அரிகிருஷ்ண மாதேவா
அபயமுன் பாதமையா அடியோரைச் சேரையா

தீபதூபங் கொள்ளையா திசையே விளங்குமெய்யா
மாது யெனக்கொருசீர் மகவைத் தந்தாளையா (ஆ)

ஆபத்தில் வந்துநின்று அனுக்கிரகஞ் செய்வேனென்று
எபன் றனக்குச்சொன்ன இணையில்லா தேவா வா (ஆ)

முத்தாரா லாத்தியொடு மும்மலர் பூசையிடு
நத்தியே வந்தோமோடு நாராயணா நீகூடு (ஆ)

## விருத்தம்.

சந்தணம்மணக்கும் மார்பா சகலரும் துதிக்கும்தாளா
உந்தனைநம்பிவந்து ஒழுக்கடையாதோரில்லை
பந்தமா வெந்தனுக்குப் பாலனொன் றளிக்கவேண்டும்
சந்தத முந்தன்பாதம் சங்கையாய் போற்றினோமே.

வசனம்.

தேவரீர் கருணை பாலிக்கவேண்டும் மாதேவா.



## பதம்.

(தேரைநிறுத்த சொல்வீர்—என்கிற மெட்டு, சைபிந்திய பாகம்.)

கண்ணிகள்.

மைந்தரில்லை யென்று தேடியே—மா கிருஷ்ணதேவா
மலரடியை வந்து நாடியே
உந்தனடி வந்தோம் பாடியே—மா கிருஷ்ணதேவா
உரியவரந் தந்தாள் நீடியே
முனிவ ரெல்லாம் போற்றும் பாதனே—மா கிருஷ்ணதேவா
முற்றும் பாண்டவர் சகாயனே
பனிகடல் வளர் பத்மநாபனே—மா கிருஷ்ணதேவா
பாவியென்ற பேரைப் போக்குமே.

## தேவாரம்.

எத்தனை நவங்களோதான் இன்னிலஞ் செய்தாய்தேவா
முத்திக்கு முதலாய்நிற்கும் முன்னவா பாரார்ந்தமாயா
நத்தியே வந்தோம்புத்ர நல்வரந் தருகவேண்டும்
சத்தியம் நம்பினோரை சார்ந்திடு பொருளுநீயே.

பொது-வசனம்.

அகோதெப்படி யென்றால் இப்படி இவர்கள் பற்பல தேவர்களுக்கும் பனி பூசைக் கொடுத்தும் ஒன்றும் நிறைவேற வில்லை யென்று விசனப்படுகிற விதங் காண்க.

## துக்கத் தரு.

(பாலா என்ன காலம்—என்கிறமெட்டு, அரிச்சந்திரவிலாசம்.)

பல்லவி.

நானோ பெரும்பாவி யென்னை தெய்வம் நாடா நாடா

அனுபல்லவி.

வீணைகோயிலை விரும்பியபாவிநான்
ஆணை தடைக்கலம் அண்டாது விட்டவன்
சேணுடர் முன்னோரை சீறித்துறத்தினேன்
தானே தானே (பாலா)

அன்னமென்ற பேரை பின்னவா வென்றேனே
நன்னபிதா சொல்லை நான்மீறி செய்தேனே
மன்னுங்கோயில்கண்டு முள்ளையிரைத்தேனே
மாபாவி பாவி (பாலா)

பிள்ளையில்லா மலடியென்றென்னைப் பேசபேச
சள்ளை ஜன்மம்வேண்டாம் சார்ந்த நிதிவேண்டாம்
துள்ளித் துடிக்குதே துன்பம் பெருகுதே
துய்யா துய்யா (பாலா)

## அகவல்.

என்செய்வேன் நானும் எண்ணிலாக் கோயில்
நன்னய நவங்கள் நான்செய்து முடித்துங்
கடவுள் முகம்பார்க்கா கருங்காலி யானேன்
உடலெல்லாஞ் சோர்ந்தேன் உயிரொன்றே நிலைத்தேன்

கண்ட தேவர்க்கிங் காம்பூசை செய்தேன்
உண்டிக் கசந்தேன் ஓயாவொரு சந்தி
இருந்துமே பார்த்தேன் ஏழை யெளியோர்
அருந்திட வன்னச் சாலையு மமைத்தேன்

பாழ்பட்ட கோயில் பழுதுகள் பார்த்தேன்
சூழ்ந்த நற்சோலை சுகமுற வைத்தேன்
எத்தனை செய்தும் எம்பிரா னெனக்குப்
பாலனொன் றளிக்க பக்ஷமே யில்லை

காலமுங் கலியோ கதிதருங் கடவுள்
சித்தமே யில்லை சிவசிவா தேவா.

## அரசன் விருத்தம்.

அழகிய பெண்ணேநீதான் அழுதுமே சோரவேண்டாம்
உழக்கினி லளந்தபேர்க்கில் குற்றதே கிடைக்குங் கண்டாய்



மழக்கத்தால் மலியவேண்டாம் மாதேவன் கிருபைசெய்வார்
வழக்கது நம்மேலுண்டு வாரணன் கிருபைசெய்வார்.

### வசனம்.

கேளாய் கிரேசியாளே நீ யேன் வீணாக அழுது சோர்ந்து போகிறாய். தெய்வம் நமதுமேல் வர்மங்கொண்டால் அதைவெல்ல நம்மால் முடியுமா ? அவரை நாம் வாதாடி புத்திர சந்தானத்தை யடையலாம் மனந் திடங்கொள்ளும்.

## அரசன் தேற்றுதல்.

(ஆ ஆ நாமென்னென் றுரைப்போம்—என்கிறமெட்டு, சதாரம்.)

### பல்லவி.

வா வா வெனது மயிலே—மனத்
தேறுவா யாறுவாய் கூறுவேன் சீருடன் (வா)

### சரணங்கள்.

பாவலர் போற்றியே பஜனைகள் மீட்டிடும்
ஆவலுடைய தெய்வம் அனுமதி வரும்பெண்ணே (வா)

சாவதும் பிழைப்பதும் ஜெகமுதல் நிலைப்பதும்
ஆவதவரால் பெண்ணே அழுதுநீ மெலியாதே (வா)

பேதைக் களிப்பவன் பிள்ளைக்கறி தின்பவன்
கோதையே மனம்வைத்தால் குறையின்றியருள்வரும் (வா)

### பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் கிரேசியான் மனைவியின் மனதைத் தேற்றிக்கொண் டிருக்கும்போது மகா வைத்திய சாஸ்திரத்தில் சிறந்தவராகிய "புல்லியல்" என்கிற ரோமை வைத்தியர் வருகிற விதங் காண்க.

### பதம்.

(என்ன சதி செய்தானந்த பாவி எப்ரேயம் —
என்கிற மெட்டு, ஜோசப் சபா.)

பல்லவி.

வல்லவன் புல்லிய சென்னும்
வைத்தியன் நானே காணும் (வல்)

அனுபல்லவி.

நல்ல நூல்கள் நான்படித்தே
ஞானத்தில் மிக செழித்தே (வல்)

சரணங்கள்.

நாலாயிர மொழிசூழ் நாற்பத்தெட்டு வியாதியும்
காலாகோலமாயடித்து கண்டித்துஜெபங்கள்செய்யும் (வல்)

நான்கு மறையோடுமே நாவிலொன்று ரகசியம்
தானது தெரிந்த ஜெப தாய்மரியருளைப்பெற்ற (வல்)

புன்மத சங்காரமும் புகழுடன் படித்துநான்
பன்னிரு தாரகையாள் பாதம விடாதவனான் (வல்)

வைத்தியர் கிரேசையானையும், அவர் மனைவியையும் வாழ்த்தும்

### விருத்தம்.

மகிழுள்ள கீர்த்திபெற்ற மகாபிரபு மகனை
அகிலத்தில் வாழ்வுபெற்ற ஐயாவென் கிரேசுமன்னை
திகழுறும் உம்மைக்கண்டு தினக்ஷேமம் தெரிந்துக்கொள்ள
புகழுடன் வந்தேன்பாரில் புண்ணிய மன்னவா நீ.

இராஜன் வசனம்.

வாருமையா எனது தந்தையின் காலத்தின் பரம்பரை வைத்தியரே உமக்குப் பகவான் கருணையுண்டாகக்கடவது உட்காரும் சுவாமி.



வைத்தியர் வசனம்.

தங்களை யான் கண்டதே கண் செய்த பாக்கியம் தாங்களும் தங்கள் மனைவி மைந்தரும் க்ஷேமந்தானே பிரபுவே.

இராஜன் வசனம்.

ஆம் நானும் என் மனைவியும் க்ஷேமந்தான் வைத்தியரே எனக்கு புத்திர சித்தி கிடையாது. எங்களுக்கு புத்தென்னும் வாசல் கடைசியில் வழிமடச்சாக இருக்கும் ஐயாவே.

### இராஜன் வைத்தியருக்கு சொல்றது.

(என்முகம் பார்த்தருளையா—என்கிற மெட்டு.)

பல்லவி,

என்ன சொல்வேனிந்த சள்ளை—எந்தன்
அடிவயறெரியுதே ஐயா என்கொள்ளை

சரணங்கள்.

பொன்னான தேவர்க்கெல்லாம் பூபந்தல் சொப்பனிட்டு
சென்னி வணக்கிநாலும் சேவையே செய்தாநின்றேன் (என்)

என்மனைவி யாளுமே ஏதேதோ காப்புகட்டி
இன்னம் ஒருசந்தியாய் இருகா மேக்குருள் (என்)

அப்படி செய்திட்டாலும் அருள் விளைவாமில்லை
தப்பா தரைமெழுகி தான்சாத முண்கிறாளே (என்)

வசனம்.

இப்படியெல்லாம் நாங்கள் கடவுளை தியானஞ்செய்தும் பயனடையவில்லை வைத்திய சிபுரோத்தமரே.

### வைத்தியர் விருத்தம்.

காரியம் வேறேயுண்டு கண்டிப்பாய் வாக்கைநம்பு
வீரிய ஆபிரகாம் விரும்பிய வாறுதானே
தேரிய வயதுமுப்பில் திகழுற விசாக்கென்னும்
பேரினைப் பெற்றோன் தன்னை பெருமையாய் பெற்றான் தானே.

வசனம்.

உண்மையோடு நம்பினால் விருத்தாப்பியத்தில் ஈசாக்கை, ஆபிரகாமுக்கு கொடுத்ததுபோல் உண்மை தேவனை நம்பினால் உனக்கும் பலிதமாகும். மெய்யான கடவுள் ஒருவர் இருக்கிறார். வீணாக பல தேவர்களையும் வணங்கி பாவத்தைச் சேகரித்துக் கொள்ளுகின்றாயே அரசனே சொல்லுகிறேனே கேள்.

### பதம்

(பாதாளஉலகத்தின் வேதாளராசனானே—
என்கிற மெட்டு, ஆதாம் ஏவாள் விலாசம்.)

பல்லவி.

வேதாந்த வேதந் தந்த ஆதாரமான கர்த்தர்
வேறேயவரை நாடு

அநுபல்லவி.

தீதுறு பேய்களைத் தேடி பஞ்சலிசெய்தாய்
ஆதரைப் பாவமேயன்றி யணுவு முடியாதையா

சரணங்கள்.

பாலரை சூலையனல் பற்றாமல் முகம்பார்த்தார்
பதஷ்டன் கோலியாத்தன்னை பக்தன் தாவிதைக் கொண்டு
காலத்திலே யழிக்கக் கர்த்தனவரைநம்பு
கடைத்தேறுவாய் புத்திரர் கையிலேந்துவாய் தெம்பு (வே)



ஆபிரகாமுக்குத் தான் அன்பாய் யீசாக்கைதந்தான்
அந்த சிம்சோனுக்கு அளித்தார் மயிர்பலத்தை
தோபியாசுக்கு வழித்துணை சம்மனசை விட்டார்
துய்யனவனைக்கோரு மெய்ஞானத் தன்னில்சேரு (வே)

வசனம்.

இப்போர்க்கொத்த மருத்துவங்கள் எத்தனை செய்திருக்கிறார் இந்த உலகத்திலே வந்து அநேக நவங்கள்செய்து மெத்தாக பாடுபட்டு சீவனைவிட்டு மறுபடியும் உயிரோடெழுந்து மெஞ்ஞான சபையை ஏற்படுத்தி பரமண்டலம் சென்றார். அந்த மெய் வேதத்தை யனுசரிக்கும் குருக்களிடம்போய் தீட்சையைப் பெற்று அவரை விசுவாசித்து வந்தால் உனக்குப் புத்திரபாக்கியம் உண்டாகும் நீர் என்னோடு வருவீராகில் நான் குருப்பிரசாதியை காண்பிக்கிறேன் இராசனே.

அரசன் வசனம்.

ஆனால் இதுவரையிலும் இந்த ரகசியம் எனக்குத் தெரியாமலிருந்தது இப்போது தெரியவந்தது. நாங்கள் அப்படியே ஞானஸ்நானம் பெறுகிறோம். அந்த ஆத்மகுருவிடம் நாங்கள் வருகிறோம் எங்கள் மனத்திருப்தி யடையப் பாரும் வைத்தியரே.

பொது-வசனம்.

அகோதெப்படி யென்றால் அரசனும், வைத்தியரும் தேவாலயம் வந்தவுடன் குருவானவர் வருகிற விதங்காண்க.

### குருவானவர் வருகிற தரு.

(சொப்பனங் கண்டேனே—என்கிறமெட்டு, ஜோசப்புசபா)

பல்லவி.

வேதமுனி நானே—ஞானவழி
வேதமுனி நானே

அனுபல்லவி.

சாதனையோடு சர்வேசனை யன்றுடும்
போதனை தெரிந்த புண்ணிய நீபத்தின் (வேத)

சரணங்கள்.

புண்ணிய நல்மார்க்கம்—சபையோர்க்கு
பூஷணமாய் புகட்டும்
அண்ணல் சர்வேசன் அளித்த கற்பனையை
அற்புதமாய் சொல்லும் சற்குருவான நல் (வே)

வசனம்.

எங்கள் ஞானகுருவே உமக்கு தோத்திரம்.

குரு.

ஆசிர்வாதம்.

வைத்தியர்.

சுவாமி இவர்கள் சத்தியவேதத்தின் உறுதியை நம்பி ஞானஸ்நானம்பெற வந்திருக்கிறார்கள் சுவாமி.

குரு.

மெத்த சந்தோஷம் அரசனே நீயும் உன்மனைவியும் ஞானஸ்நானம் பெற முழு மனதாக இருக்கிறீர்களா ?

அரசன்.

அப்படியே முழு மனதாக இருக்கிறோம் மஹாகுருவே.

குரு.

அம்மா உனக்கும் சம்மதிதானா.

கிரேசியாள்.

ஆம் சுவாமி.



## குரு விருத்தம்.

பாவிகட் காகவேதான் பஞ்சைபோல் வேடங்கொண்டு
மேவிவந்து பாடுபட்ட மெய்யனை நம்பி நீங்கள்
சேவித்துக் கற்பனையை சிறப்பாக நடத்திவந்தால்
ஆவி யொழியுங்காலம் அனுசரிப்பீர் மோட்சபதி.

வசனம்.

அப்படியே நீங்கள் முழு மனதோடு நம்பி ஞானஸ்நானம்பெற்றால் கடைசிநாளில் மோட்சத்தை யடைவீர்கள் ஆகையால் இப்படி உட்காருவீர்கள்.

## விருத்தம்.

ஆவியந்த கருணையாலே கிரேசியான் கிரேசியாளே
நாவிலுய ருப்பிட்டு நானளித்தேன் தீட்சையதை
கோவில் மறவாதே குருசொல் கடவாதே
மேவியதே வாசீர்வாதம் விசாலமாய் பெற்றீர்தானே.

வசனம்.

ஞானஸ்நானம் பெற்றீர்கள். இனி தேவ கற்பனையை மீறாதீர்கள் ஜாக்கிரதை.

(தேடியுங் கண்ணில் காணேனே—என்கிறமெட்டு, ஜோசப்தரு)

## அரசன் அரசி தரு.

பல்லவி.

துய்பக் கடல் குளித்தோமே—இனி
தேறினோம் தேறினோம் தேறினோம் (துய்)

அனுபல்லவி.

பொய்பேய்க ளிடஞ்சென்று போற்றிப் புகழ்ந்துநின்றோம்
பொன்வேத மறியாமலே இதின்
பூரணம் பூரணம் புதுமை யறிந்துக்கொண்டோம் (துய்)

உண்மை ரகசியத்தின் உளவை யறியாதுபோனோம்
  உரியஞான பால் குடித்தோம்
உற்றோமே இனி பெற்றோமே யருள் கற்றோமே
    உண்மைத் தெரிந்துக் விட்டோமே (துய்)

ஞானகுருவே நாங்கள் தேறி சுக மடைந்தோம்
  நல்ல தீட்சையைப் பெற்றோமே ஓ
ஞானமே ஞானமே ஞானமே
  நற் கருணையு முண்டாமே. (துய்)

பொது-வசனம்.

இவர்கள் ஞானஸ்நானம் பெற்று அரண்மனை வந்தபின் சில காலஞ் சென்று தேவத்தாயருளால் கெற்பந்தரித்து நாளுக்குநாள் கெற்பம் வளர்ந்து போதுகாலம் முடிவாகி பிரசவவேதனைப் படுகிற விதங் காண்க.

## கிரேசியாள் கர்ப்ப வேதனையால் விசனப்படல் தரு.

(ஐயையோ நானென்ன செய்வேன் அடிதாளக்கூடவில்லை—

என்கிறமெட்டு, ஜெனிக்கிலாஸ் விலாசம்)

கண்ணிகள்.

ஐயையோ நானென்ன செய்வேன்
அடிவயறு நோகுதையோ
மெய்யாக விலாமுறிந்து
விட்டுப்போகு தென்ன செய்வேன் (ஐ)

(வசனம்.) ஆ ஆ தெய்வமே தேவத்தாயே.

பெண்களிந்த வாதனையை
பெற்றெப்படி சகிப்பாரோ !
கண்மணி யாய்மரி கன்னித்தாயே என்
கஷ்டத்தை நீ தீராயம்மா (ஐ)



நெஞ்சுலர்ந்து போகுதையோ
நினைவு தடுமாறுதே யென்
சஞ்சலத்தை தீர்க்குந் தாயே
சற்குணமே யிங்கே வாராய். (ஐ)

வசனம்.

கிரேசியாள் இப்படி வருத்தப்படுகிறதைக்கண்டு கிரேசியான் மருத்துவச்சியை அழைத்துவரும்படி உத்திரவுகொடுக்கிற விதங் காண்க.

## விருத்தம்.

அருமைபெண் தோழிகேளாய் அதிவேகமாக சென்று
மருத்துவந் தன்னில்தேர்ந்த மாவலு நிபுணியான
கருத்துளக் கிழவிதன்னை கண்டிப்பா யழைத்துநீயும்
சுருக்குடன் வரவேவேண்டும் சொல்மொழி தவறிடாதே.

தோழி வசனம்.

அப்படியே அழைத்து வருகிறேன் அரசே.

தோழி மருத்துவச்சியைக் கண்டு சொல்வது.

வசனம்.

அம்மா மருத்துவச்சியே அரசன்மனைவி கெற்பவேதனையை சகிக்காமல் வாதைப்படுகிறாள். உடனே உம்மை அழைத்து வரும்படியாக உத்திரவு அனுப்பி யிருக்கின்றார்கள் உடனே புறப்படும் அம்மா.

மருத்துவமாது-வசனம்.

அப்படியா; அம்மாமார்களே சரணம். இதோ வருகிறேன். பாபம் கிரேசியா ளரசர் மனைவிக்கு வெகுநாட்களாய் பிள்ளையில்லாமல் சஞ்சலப்பட்டுக்கொண் டிருந்தார்கள். கடவுள் கிருபையால் புத்திர பாக்கிய முண்டானதா, மெத்த சந்தோஷம், மெத்த சந்தோஷம்.

## மருத்துவச்சி வருகிற தரு

(சத்தியவானே என் முக்தான பாதங்கள் மெத்தவு நோகுது மத்தென் செய்வேன்—என்கிற மெட்டு.)

தோடி-ரூபகதாளம்.

பல்லவி.

ஊரினில் பேரான தீர மருத்துவ
உபாயந் தெரிந்தவள் நானுகும்

கண்ணிகள்.

நேரினில் பிள்ளை வராமலே
நெட்டிக் குறுக்க விழுந்தாலே
சாரித் திருப்பியே யுள்ள வழிநோக்கும்
சங்கட்ட மானதை யான் மிகவே தீர்ப்பேன் (ஊ)

வசனம்.

கேளுங்களடி யென் பெண்களா, என் சங்கதி யுங்களுக்குத் தெரியுமா, பிள்ளையானது குறுக்க விழுந்து எக்கச்சக்கப்பட்டாலும் ஒரு க்ஷணத்திலே பக்கம் பார்த்து தட்டி நேரான வழி வரும்படி செய்திடுவேன். பின்னும்,

தரு.

ஆரார் சிநேகத்தைப் பண்ணுவேன்
அன்புடனே யானு மெண்ணுவேன்
சோரத்தால் சூல்கொண்ட சுந்தரவேசியும்
போர யவிசாரி பெண்களை நேசிப்பேன் (ஊ)

வசனம்.

நான் நல்ல இடந்தானே நேசிப்பேன். திருட்டு ஆம்பிடையான் வைத்து கர்ப்பங் கொண்டவளைத் தேடுவேன். பிரபுக்கள் மதித்து



இரா தங்கி காலையிலே வருகிறவளைத் தான் நான் முக்கியமாய்த் தேடுவது.

தரு.

கூட்டி வைக்கும் பெருவேலையே
குல தெய்வமாம் அந்தி மாலையே
நாட்டிலே யாண்மக்கள் நங்கையர்கள் காலுய்யும்
நத்தை, பச்சை, யோணுலுத்த, மை, மைசெய்யும் (ஊ)

வசனம்.

எனக்கென்ன தினந்தோறும் வேலைத் தெரியுமா? புருஷன் நங்கையாகிலும் ஜீவனத்துக்குப் போன நாளிலே யாதோ எச்சி நக்கி ஆறுமாத முழுக்கு நின்றுபோய்விட்டது என்று என் பேத்திமார் தேடிவந்தால் அதற்குத் தகுந்த காரம் பொடிக் கூட்டி மூணு வேளையிலே கலக்கி சுத்தமாக்கிடுவேன்.

தரு.

வாலிபமான நல் லாடவர்
வஞ்சியரைக் கூடத் தேடுவர்
மாலி மருளான வூமத்தால் தீட்டுவேன்
மாறாத ஈடதும் மகிழாக மூட்டுவேன் (ஊ)

வசனம்.

பாட்டி அந்தப் பெண்ணை யெனக்கு உபாயம் செய்திட்டால் உனக்கு வேண்டியது கொடுப்பேனென்ற மொட்டை பசங்களை விட்டேனு, அவனுக்கும் தகுந்த மருந்துக் கூட்டி இதை கறியிலே கொடு, இதை சாராயத்திலே கொடு, அல்லது மிட்டாயிலே, காப்பியிலே கொடுத்தால் உன்னை அவள் எந்த நாளிலும் பிரியமாட்டாள் என்று அவனுக்குக் கொடுத்து வேண்டிய துட்டுகளைத் தட்டிக்கொள்வேன்.

தரு.

முந்தி தலைப்பிள்ளையாலே
மூன்றுப்பணத்தைக் குறையாமலே
தந்திட வகைநீட்டி—சொந்தமா அரைபுட்டி
தயவாக வாங்கிட நான் மிகயாகெட்டி (உள)

வசனம்.

தலைச்சன்பிள்ளைக்கு சரியாக 3 பணம் அரைபுட்டி சாராயம் கணக்கா கொடுக்கவேணும். தலைக்கு மூன்றுந் தண்ணீர் முழுகு மட்டும் சாராயம், சாப்பாடு என்னமோ குறையக்கூடாது.

தரு.

புருஷனவனுக்கு தூங்கையிலே
பூர்த்தியவனோங்கப் பாயினிலே
குருமால் பொடித்தூவி வருபவள் தனைக்கூடி
கொஞ்சிட செய்திடும் வஞ்சி நான் மாரூடி (உள)

வசனம்.

புருஷன் கூடவே படுத்து, உறங்கும் நேரம் பார்த்து வந்தவன் ஜாடை கண்டால் கிருமால பொடியான இந்த பொடியை தூங்கிறவன்மேலே தூவிவிட்டால் இவன் எழுந்திருக்கிறதில்லை. அதற்குமேலே தங்கள் காரியத்தை முடித்துக்கொண்டு மறுபடி சாணா பொடியைத் தூவிவிட்டால் எழுந்துக் கொள்ளுவான். இந்தப் பொடியும் நான் முடித்திடுவேன்.

தரு.

ஆறுமாதங் கருவானதையும்
ஆருமறியாமலதையும்
ஏதுமில்லாமல் கலைத்து விழுத்திடும்
எத்துகள் கற்றமா சத்து தெரிந்திடும் (உள)



வசனம்.

அடி பேத்திமார்களே! ஆருக்குந் தெரியாமல் ஆறுமாதம் வயிற்றை யிறுக்கிக் கட்டி காப்பாற்றி எந்த மருந்திலும் வெளியாகவில்லை என்று துக்கப்பட்டவர்கள் என்னிடத்தில் ரகசியத்தைச் சொல்லுங்கள். கச்சக்கா உண்டையிலே கலக்கி இப்படிக் காறித் துப்பிவிடுகிறேன். அப்படி யில்லாமலா மருத்துவச்சி வீரம்மா வரவேணும் என்று தெரிந்தவர்கள் வழி பார்த்திருக்கிறது.

தரு.

சம்பாதனையுள்ள மாப்பிள்ளையே
சஞ்சீவி பெண்ணுன காலிலேயே
வம்பு விளையாமல் தெம்பாக வாழ்ந்தி
மற்றவருங் கண்டு என்னைப் புகழ்ந்திட (உள)

வசனம்.

நல்ல சம்பாதனைக்காரனைப் பாருங்கள். உங்கள் காலிலேயே எப்பவும் பிரிந்துபோகாமல் கட்டிவிடுகிறேன். உச்சினி மாங்காளி வசியம் எனக்குத் தெரியாதா?

தரு.

பாடையது பரிந் தேறினாலும்
பாவையர்களுன்னை யெந்நாளும்
தேடியே வந்துமே ஜாடை நமஸ்காரம்
தெண்புற செய்யநான் செய்குவே னுபகாரம் (உள)

வசனம்.

கேளுங்களடா, உங்களுக்கு கொடுக்கும் மருந்தினல் ஒருமகத்துவங் கேளுங்கள். நீங்கள் சிரிக்கிகளுக்கு ஊட்டிவிட்டால் அக்கன்னியர்கள் மடிந்து சுடுகாடு போக பாடைமேலேறினாலும் அந்த ஆவேசம் உங்களை விடாது அன்பு பாராட்டும். வேண்டுவோர்கள் அச்சப்படாமல் வாங்கி வைத்துக் கொள்ளலாம்.

தரு.

யாத மாத முழுக்கில் லார்க்கும்
மன வருத்த முள்ளவர்க்கும்
சாதனை யெள்ளுப் புண்ணுக்கு கலந்துதான்
சத்திய மாகவே சுத்தஞ் செய்வேன் (ஊ)

வசனம்.

ஆறும்பேறு பெண் பிறந்தால் (ஆறானகுடித்தனம் நீறாகிப் போகும்) என்கிற ஒரு ஐதீகத்தால் நல்ல பெண்ஜாதிகளுங் கூட கருவைக் கலைக்கிறார்கள். அதற்கு நானும் சம்மதிதான்.

தரு.

துள்ளத் துடிக்க சிசுவை வெளியாக்கி
துறுகிணற்றில் சாக்கடைக்குள் போட்டிடும்
கள்ள முண்டைச்சிகள் கன்னிப் பெண்களெந்தன்
காலினிலே வீழ்ந்து கும்பிடுவாரடி (ஊ)

வசனம்.

முக்கியம் பெருத்த வீட்டுக்காரியங்கள்தான் என் கைக்குள் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது. அவர்கள் என்னிடம் முரைப்பு பண்ணக்கூடாது.

தரு.

சூதகத்தின் கட்டியாலே
சோர்ந்துபோவார் பெண்ணதாலே
மாதந்தவறு முழுகிடச்செய்குவேன்
மல்லிகஷாயங் குடித்திடவைப்பேனே (ஊ)

வசனம்.

கன்னி சிறுக்கிகள் திருட்டு பிள்ளை கர்ப்பம் தாங்கிக்கொண்டால், சூதகக்கட்டி, சூதகக்கட்டியென்று பாசாங்கடிக்கிறார்களல்



லவா? அவர்களுக்கும் நான் கஷாயங்கொடுத்து அந்த கருவையழிப்பேன்.

தரு.

காயமோடு கர்ப்பவலைகை
கணக்கு பிசகாயலீகை
பாயும் வயிற்றுவலி பற்றுதிடதட்டி
பக்சமு மில்லாமல் போக்கிடமாகெட்டி (ஊ)

வசனம்.

கசடு அழுக்கு எங்கும் தங்காமல் எங்கும் உருவி தட்டி ஒரு பொல்லாங்கில்லாமல் காப்பாற்றுவேன்.

தரு.

பிள்ளைகட்கு உறம்விழுந்தால்
பிடித்துருட்டிக் காதைக்கையால்
சள்ளையில்லாமலே மெள்ள வுருவியே
சார்ந்த நரம்பை தெரிந்து சொருவியே (ஊ)

வசனம்.

பிள்ளைகளுக்கு உறம் விழுந்தால் அதுகளை பெரியவர்கள் எப்படி செய்துக்காப்பாற்றினார்களோ அப்படியே விதிப்படி செய்துவிடுவேன்.

தரு.

அள்ளுக்கணை முர்குணை
ஆணமாந்தை தோஷவினை
துள்ளியே கண்டாலே சல்லிக்குளிசமும்
சுகமாக செய்குவேன் யாவரும் பேசவும் (ஊ)

மருத்துவச்சி வசனம்.

சரணம் மகாராஜனே.

அரசன்.

வாராய் மருத்துவ மாதே, என்மனைவி வாதைப்படுவதை மெத்த ஜாக்கிரதையாய் பார்த்து உன் காரியத்தை நிறைவேற்றுவிப்பாயாக சீக்கிரம்.

மருத்துவச்சி வசனம்.

அப்படியே மெத்த ஜாக்கிரதையாகப் பார்வையிடுகிறேன் மகாராஜனே.

## இராஜ கன்னி அகவல்.

கன்னிமா மரியே என் கஷ்டந்தீராய்
உன்னையே நம்பி யுனாஜெபஞ் செய்தேன்
இந்தமா வேளை இரக்கம்வை தாயே
நொந்து என் தேகம் நொருங்குதே யந்தோ
சகித்திட மாட்டேன் சற்குண நிதியே
மகிமை பெறுந்தாயே மகனை நீகாராய்.

மருத்துவச்சி-வசனம்.

அம்மா ராஜகன்னியே இதோ நான் வந்தேன். இனி நீ மனத்திடமாக இருப்பாயாக இதோ ஒரு நொடியில் நல்ல குழவியை நீ பெறுவாயம்மா பயப்படாதே.

அரசி வசனம்.

அம்மா மருத்துவச்சியே இடுப்பு விட்டுப்போகுதே, விலாவெலும்பு முறிந்துபோகிறது என்னசெய்வேன் அம்மா.

## மருத்துவச்சி தரு.

(நல்ல சமயம் நல்லசமயம்—என்கிறமெட்டு, சதாரம்)

பல்லவி.

கூவாதே அம்மா கூவாதே சற்று
கூவாதே மகளே



அநுபல்லவி.

தொண்டு வுன்னை யான்திருப்பி
குறையை மாற்றுவேன்

சரணங்கள்.

பிள்ளை பிள்ளை யென்று சொல்லி
புலம்பி நின்றாயே—இதின்
சள்ளை யிப்போ தெரிந்ததா வினி
தைரியங் கொள்வாயே (கூ)

முதல் முதலிது பிள்ளை யம்மா
மும்முறம் நோவாம்
சதிபதி துணையே யுண்டு
சார்ந்து கொள்ளுவாய். (கூ)

பொது-வசனம்.

இந்தப் பிரகாரம் வாதனை யடைந்து இரேசியாள் ஓர் பெண் குழந்தையைப் பெற்றாள். இதைக் கண்டறிவீர்கள் சபையோர்களே.

அரசனிடம் வந்து மருத்துவச்சி சொல் - வசனம்.

ஐயா மகாராசனே உன் மனைவி கோடி சூரியப் பிரகாசமாக ஓர் பெண் குழந்தையைப் பெற்றார்கள் மகாராசனே.

இராசன்-வசனம்.

கேளும் மருத்துவமாதே, நீ வெகு கஷ்டமெடுத்து என் மனைவிக்கு ஒரு விக்கினமுமில்லாமல் காப்பாற்றி பத்திரமாக குழந்தையைப் பிறக்கச் செய்தபடியால் இதோ உனக்கு பதினாயிரம் வராகனும் விலை உயர்ந்த பட்டு சேலையும் வெகுமதியாகக் கொடுத்தேன் பெற்றுக்கொள்ளுவாய் மருத்துவமாதே.

மருத்துவச்சி-வசனம்.

அப்படியே பெற்றுக்கொண்டேன் மகாராசனே நான்போய் வருகிறேன் உமக்கு நமஸ்காரம்.

## கிரேசியாள் குழந்தையை தாலாட்டும் தரு.

(ஆரிராரோ ஆரிராரோ ஆரிராரிரோ-பாலா ஆரிராரிரோ—
என்கிறமெட்டு, ஜெனிக்கிலாஸ் விலாசம்.)

பல்லவி.

ஆரிராரோ ஆரிராரோ ஆரிராரிரோ—பாலா
ஆரிராரிரோ

அநுபல்லவி.

தாருண்மணி மார்பன் தகப்பன்
தாகந் தீர்த்தாளே — இந்த
தாயாருக்கும் பெருமைவர
தவத்தில் வந்தாளே—மகளே
தவத்தில் வந்தாளே (ஆ)

பச்சை ரத்ன கல்லிழைத்து
பதித்த வுஞ்சலிலே
அச்சமின்றி கண்ணுறங்குவை
அன்ன பொன்கிளியே—எந்தன்
அன்ன பொன்கிளியே (ஆ)

அரசன்-வசனம்.

கேளும் கிரேசியாளே நமது குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியது. நாம் குழந்தையை எடுத்துக்கொண்டு தேவாலயத்திற்கு செல்வோம் பெண்ணே.



கிரேசியாள்-வசனம்.

அப்படியே போகலாம் நடவுங்கள் சுவாமி.

பொது-வசனம்.

இதே பிரகாரம் அரசனும் அரசியும் குழந்தையை யெடுத்துக்கொண்டு தேவாலயம் வந்தவுடனே குருவானவர் வந்து ஞானஸ்நானம் கொடுக்கிற விதங் காண்க.

குருவானவர் வசனம்.

இப்படி கொண்டுவாருங்கள் குழந்தையை இந்தப்பிள்ளைக்கு ஞானத்தாய், ஞான தகப்பன் வந்திருக்கிறார்களா.

அரசன் வசனம்.

சுவாமி தாங்களே ஞானத் தகப்பனும், தேவத்தாயார் ஞானத்தாயாகவும் இலேசிறுத்தி தீட்சையை கொடுங்கள் சுவாமி.

குரு வசனம்.

அப்படியே ஆகட்டும்.

## தீட்சை கொடுக்கிற விருத்தம்.

தந்தைசுத னிஸ்பிரித்து தயவான வாசிரால்
இந்த குழந்தையின்பேர் எழில் பிலேமனு ளாகும்
கோதைக் கன்னிமரியாள் கூடத் துணையிருக்க
சீததயை ஞான ஸ்நானம் சிறப்புற தந்தேனே.

வசனம்.

பிலேமனம்மாள் என்றால் ஞானப்பிரகாசம் விளங்கப்பட்டவள் யென்று அருத்தமுடையதாகிய நல்ல லட்சணமுள்ள பெயரைக் கொடுத்தேன். உங்கள் பெயரையும் புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறேன்.



சென்னை-600 008

பொது-வசனம்.

இந்தப் பிரகாரம் தீட்சைப்பெற்று குழந்தை வளர்ந்து ஞான சாஸ்திரங்களை கற்று பதிமூன்று வயது கடந்து அன்னைப்பிதாவின் கட்டளையை அனுசரித்து ஒரு நட்சத்திரம்போல் பிரகாசித்து வளர்ந்து வருகிற காலத்தில் ரோமாபுரியை அரசாளுகிற வல்லரசனாகிய "தியோக்கிலேசியான்" யென்னும் கொடுங்கோல் அரசன் கிரேசியின்மீது படையெடுத்து வருகிறதாகப் பல பெரியோர்களால் கேழ்விப்பட்டு நாம் யாதும் நமது மேலரசனுக்கு ஒரு விக்கினமும் செய்யாதிருக்க நம்மீது படை யெடுக்கவேண்டிய காரணமென்னவென்று துக்கப்படுகிற விதங் காண்க.

## கிரேஸியான் விசனப்படுகிற தரு.

(எப்போ அகலுமவ ளாசை—என்கிற மெட்டு, சயிந்திய பாகம்.)

பல்லவி.

வினைக வென்மீது தானோ—அந்த
வேந்தன் பகைகொண்டா லினியென்செய்வேனோ (வி)

சரணங்கள்.

பானுவை முடியாக கொண்டவளே—எங்களை
பாதுகாத்தருள் சோதி யானவளே
கான லடிப்பட்ட கதிரைப்போல் வாடுறேன்
கர்த்தனை யேந்திய கருணைகரியே யம்மா.

கி ரே சி யா ள்.

பல்லவி.

புன்மனங் கொள்ளாதே அய்யா—அந்த
புகழ்பர னுனக்கு வருவார் துணைமெய்யா (பு)



சரணங்கள்.

பன்னும்பரமனுர் பின்னம் வரவிடுக்கார்—அவரை
எண்ணி யனுதினம் நண்ணி ஜெபம்புரிவாய்
இன்னம் பசாசுகளா லிக்கட்டு வந்தாலும்
அன்னை மரியாள் துணை யடியார்க்கு மிகவுண்டு (பு)

இராசன்-வசனம்.

கேளும் பெண்ணே இந்த சங்கட்டங்கள் வந்து நேருகிறதற்கு முன்னமே நாம்போய் அரசனைக் கண்டுகொண்டால் எல்லாக்காரியமும் அனுகூலமாகும். ஆகலால் நீ ஆயுத்தப்படுவாய் கிரேசியாளே.

பொது-வசனம்.

இந்தப் பிரகாரம் இவர்கள் பிரயாசைப்படுதற்காக கப்பலை ஆயுத்தப்படுத்தி தங்கள் முஸ்திப்போடு அரசனும், அரசியும் குமாரத்தியாகிய பிலேமனுளும் கப்பலேறி கப்பல் பிரயாணமாகி மாலுமி கப்பலோட்டி வருகிற,

## ஏலப்பாட்டு தரு.

பல்லவி,

ஏலேலோ ஏலேலோ—கப்பல்
ஏகுது பார் ரோமைநகர்

அனுபல்லவி.

ஏலேலோ தியோக்கி லேசியான் விண்ட
எண்ணத்தின் புண்ணதை யினிதாற்றி துண்ட
வாலேந்தி கற்களும் வயிரமும் பூண்ட
வகையான தினுசுகள் அலங்காரங் கொண்டே (ஏ)

ஆறாத கோபத்தை யாற்றுவே னென்று
அலங்கார மனைவியும் அலங்காரந் துன்றும்

பேரான பிலோமனு பிரியக் கற்கண்டு
  பெண்ணையுங் கூடவே யழைத்துமே கொண்டு (ஏ)

நடக்குது கப்பலும் நடுகடல் பட்டு
  நாலாவேள் தீபேத்து நகரத்தை விட்டு
அடகுநல் காஷ்மீரும் அய்ராசல் தொட்டு
  ஆனந்த பாய்மரம் அன்பாக நட்டு (ஏ)

கிரேசியான் அரசனை வணங்கல்.

அரசே தோத்திரம், வெகுமானங் கொண்டுவந்தேன் அங்கீகரிப்பீராக.

பொது-வசனம்

அகோதெப்படி யென்றால் கிரேசியான் கொண்டு வந்த நவரத்தினங்களையும், புஷ்பங்களையும் அரசனண்டை வைத்து வணங்கிக்கொண்டபின் அரசன் சந்தோஷப்பட்டு இவர்கள் க்ஷேமத்தை விசாரித்து கூடக் கூட்டிவந்த மகளான பிலோமனுவைக்கண்டு மோகங்கொண்டு கிரேசியானிடம் சொல்லுகிற சங்கதியை கேளுங்கள் பிரபுக்களே.

## இராஜன் தரு.

(பத்மினிக்குள் ரத்தினமே—என்கிறமெட்டு, கோதவிலாசம்)

கண்ணிகள்.

மெத்தவும் சந்தோஷமானேன்
  மேன்மை யுங்கள் சேவைக்கண்டு
சித்தம்வைத்து வொன்று கேட்பேன்
  சிந்தை கனிந்து சொல்வீரே (மெ)

உந்தன் மகளான விந்த
  வநிவில் மிருக்தவளை
எந்தனுக்கே யளித்தால்
  இன்பமாம் புரிவேனே. (மெ)

சித்தினி சிறியாள்மீது
  மெத்தவு மாவல் கொண்டேன்
முத்தான முத்தவளை
  முன்னே கொடுப்பீரோ சொல். (மெ)



இராசன் வசனம்.

கேளும் கிரேசியானே இதோ உன்னோடு கூட வந்திருக்கும் யாதுகிரோன் மணியின்மீது என்னிஷ்டம் நாடுகிறது. ஆகையால் அக்கன்னியை எனக்கு நீர் கொடுப்பாயாகில் நான் வதுவைசெய்துகொள்ளுகிறேன். உனக்கெல்லா பாக்கியமும் குறைவில்லாமல் கொடுப்பேன். உனக்கும் உனது மனைவிக்கும் சம்மதி தானா சொல்லுவீர்கள் ?

கிரேசியான்-வசனம்.

அப்படியே நீர் கேட்டபிரகாரம் எனக்கும் எனது மனைவிக்கும் சம்மதியே மஹாபிரபுவே.

## பதம்.

(விளக்கது முடிக்கிறேன்—என்கிற மெட்டு, ஜெனிக்கிலாஸ் விலா)

பல்லவி.

நல்ல சந்தோஷமான மணத்தின்சேதி
  நஞ்செவி கேட்டோமே

பல்லாயிரம் வருஷம் பாரத் தவமிருந்தோர்
எல்லா தவமிருக்கு மிருடியோ ரடைந்தவர்

  மட்டில்லா மகிழ் படைத்தோன் நமக்கு
  சட்டபடிக் கிழ்படிய

சந்தர்ப்பங்கள் நேர்ந்தது இன்று
சந்தோஷ மாகினோமே

  ஆட்சேபனை செய்யொண்ணாது நாமும்
  அன்பாய் விடை கொடுத்து

அரசனைக் கிழ்படுத்த
ஆனதே சுகத்தின் காலம் (நல்ல)

வசனம்.

ஆ எனது அருமை குமாரத்தி பிலோமனுளே, உனக்குநல்ல காலம் கர்த்தர் முகம்பார்த்தார், இந்தஅரசன் உன்னைக் கலியாணம்செய்ய ஆசைப்படுகிறார். நீ யாதொரு தடங்கல் செய்யாமல் ஒப்புக்கொள்வாய் மகளே.

### தகப்பன் தரு.

(தேவர்க்கெல்லாம் அதிபதி தேவராசனே அந்த சேதியை

உரைக்கவந்தோம்—என்கிறமெட்டு, மன்மதவிலாசம்.)

பல்லவி.

கண்ணுக்குள் மணியாய் வந்த
கற்பக மான—என்
கவலையில் மிகுத்த மகளே
சொல்லுவேன் கேளாய் (கண்)

### தாயார் தரு.

பல்லவி.

இராஜர்க் கெல்லாம் ராஜதீரன்
ரத்ன பொன் கிரீடன்—யாம்செய்
பூஜைபலனே உன்னைமணம்
புரிய மனங்கொண்டார் (இ)

வசனம்.

அம்மா பிலோமனுளே நமக்கு நல்ல காலம் வந்து நேர்ந்தது போலிருக்கிறது. உன்னை இந்த ரோமை நகர் சக்ரவர்த்தியானவர் மணம்புரிய மனது வைத்திருக்கிறார். எங்கள் வார்த்தையைத் தள்ளவேண்டாம் அன்புள்ள மகளே.



### பிலோமனுள் தரு.

பல்லவி.

என்ன மதி யுங்களுக்கு எற்காது தானம்மா—அந்த
கன்னிமரி சேயனுக்கு காலமு மடிமையான் (எ)

வசனம்.

கேளும் தாயே நான் சிறுமியாகவிருக்கும்போதே என் கற்பை சேசுநாதருக்கு ஒப்புக் கொடுத்துவிட்டேன் நீங்கள் நினைப்பது தவறு யிருக்கின்றது தாய் தந்தையரே.

### கிரேவியான் தரு

மாதா பிதா வார்த்தை மீறி மதிமயக்குறாய்—இது
நீதிக்கு விரோதமாகும் நீயேன் தள்ளுறாய் (மா)

### தாயார் தரு.

பெற்ற வயிறு பற்றவைக்கப் பிள்ளையாய்ப் பிறந்தாய்—அந்த
கொற்றவர்க்கு வாக்களித்தோம் கோதாய் மீறாதே (பெ)

### பிலோமனுள்.

முப்பொழுதுங் கன்னியான முத்து மாமரியாள்—நான்
எப்பவு மவளடிமை ஏற்கேன் மணம்புரிய (மு)

வசனம்.

என் பரம பிதாவாகிய ஸ்ரீ சேசு ரக்ஷகருக்கு என் கற்பை தத்தஞ் செய்துவிட்டேன். நான் வேறு கலியாணம் செய்யக் கூடாது அம்மா. தேவதாயாருக்கு நானடிமை.

பதம்.

(நல்லவன் அவனே—என்கிறமெட்டு, ஜெனிக்கிலாஸ்)

பல்லவி.

நான் சொல்லுவேன் கேளாய் நீ
நான் சொல்லுவேன்

சரணங்கள்.

மன்னவனுன்னைக் கொள்ள
  மனம் வைத்தபோது மகளே
பின்னஞ் சொன்னு னுலகம்
  பிழையது கூறுமே (சொ)

அன்னைப் பிதா யிருவர்
  அறிவாய் நீ தெய்வமென்று
பண்ணும் வேத கற்பனை
  படித்ததை மறந்தாயோ (சொ)

ஒரு பெண்ணைப் பெற்றவர்கள்
  உகந்து கன மடைந்து
பெருமை யடைந்தது போல்
  பிதா வென்னை யடையசெய் (சொ)

என்னருமை குமாரத்தியே உன்னால் நாங்கள் பெருமை யடையவேண்டும். என் வார்த்தையை தள்ளாதே நீ அந்த மஹா பிரபுவை மணம் புரிந்துக்கொள் மகளே.

## பிலோனுமள் தரு.

(சொப்பனங் கண்டேனே என்னம்மமாரே—
என்கிறமெட்டு, ஜோசப்புசபா.)

பல்லவி.

சலித்து வெறுத்தேனே கலியாணத்தை
வலித்து விரும்பேனே

சரணங்கள்.

ஜொலித்து விளங்கிடுஞ் சுந்திர கர்த்தாவின்
நிலைத்த வடிமைக்கு நீணில மீதினில் (சலி)



மூன்று பிராயத்திலே சாதனை முற்றுமே செய்துவிட்டேன்
ஆன்ற வடியாளை அற்பமா யெண்ணுதீர் (சலி)

வசனம்.

என்னருமை தாய் தந்தையர்களே நான் என் கற்பை சருவேசனுக்கு ஒப்புக் கொடுத்துக் கலியாணத்தை வெறுத்து விட்டேன் நீங்கள் என்மேல் கருணை பாலித்து இந்த ஒரு காரியத்தை மாத்திரம் நிவர்த்திச் செய்யவேண்டுமாறு தயையோடு கேட்டுக் கொள்ளுகிறேன் மன்னிக்கவும்.

## கிரேஸியான் குமாரத்தியை அரசனிடத்தில் கொண்டு வருகிற தரு.

(இந்தமுக்கி வாணிக்கி மன சிந்திலேதயா—என்கிற மெட்டு.)

பல்லவி.

வா வா யெந்தன் செல்வியாளே
வருத்தங் கொள்ளாதே—கஷ்டம்
வந்தால் மீளாதே (வா வா)

சரணங்கள்.

மாவா வலு தீரனுன்னை மணமே செய்தாலே
  தாவா நீயும் ராக்கினியாய்
தரித்து வாழ்வாயே-லோகம்
  மதிக்க நீள்வாயே (வா வா)

உன்னை கொண்டு ராசனிடம்
  உகந்துநான் விடுவேன்
பன்னிநீயே விலக்கி கொள்வாய் பாவிநானென் செய்வேன்-இந்த
  புவிதனை வைவேன் (வா வா)

கிரேசியான்-வசனம்.

ஐயா மஹாராஜனே இதோ என்மகளை நீர் விரும்பி கேட்டபடியே கொண்டு வந்தேன். இப்போது உனதிஷ்டம்போல் மனக்குளிர்ச்சியோடு கலியாணம் செய்து சுகமாக வாழக்கடவீர்கள் மஹாராஜனே.

அரசன் வசனம்.

அப்படியே கொண்டுவந்தபடியால் மெத்தவுஞ் சந்தோஷம் கிரேசியானே.

(கிரேசியான் மகாராசனிடம் பிலோமனுளை விட்டு உத்திரவு பெற்றுக்கொண்டு தன்னுடைய சுயதேசஞ் சென்ற பின்)

## தியோக்கிலோவுயான் பிலோமனுளோடு சொல் தரு.

(உன்னைவிட மனதுமுண்டோ—என்கிற

தங்கசிந்து, ஜெனிக்கிலாஸ்விலாசம்)

அரசன்.

முன்னால் நீ வந்தபோதே—வென்னழகிய மயிலே
கண்ணிலகிய குயிலே—செந்தாமரை ஒயிலே
உன்னாலே கட்டுப் பட்டேன்
உனக்கென்ன குறையுண்டு

பிலோமனுள்.

குறை யெனக் கென்னையா—அந்த
மாமரி பாதம்—என்னுளு மென்சாதம்—அதை
பருந்தவேன் நீதம்—துயரிதைக் கடந்து
அந்த—துய்யதலஞ் சேருவேன்



அரசன்.

உந்தன் வடிவைக்கண்டு மன
முருகுதே வஞ்சி—என்னை—மருவுவாய் கொஞ்சி
மனந்—தளராதே அஞ்சி—உந்தன்
சிந்தை அபராதடி—எந்தன்—செல்வம் நிறைந்தவளே

வசனம்.

உன்மீது என் கவலையானது உதயமாகிவிட்டது. நீயே என் உயிரைப் பறிக்கும் சண்டமாருதமாக விளங்குகிறாய். என்மீது உன் தயவை பாராட்டி அனுசரித்து என் மனதைக் குளிரச் செய்வாய் பெண்ணே.

பிலோமனுள்-வசனம்.

கேளும் அரசனுகிய பிரபுவே, நான் சிறுமியாக இருக்கும் போதே என் கற்பைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுத்து விட்டேன். என்னை நீர் பலவாறுய் சொல்லுவது உமக்கு நன்மையல்ல. நான் உன்னை விரும்பவேமாட்டேன் அரசனே.

அரசன்தரு.

(ஊர்வசி என்பவள் தானே-ரதிதானே-ரம்பைதானே-ப்ரம்மன்

உலகை வெல்லப் படைத்தானே—என்கிற மெட்டு.)

பல்லவி.

கண்ணே நீ இன்னமும் மோடி—செய்வதோடி—உன்னைக்
கடுக மணம்புரி வேண்டி
அடி-காமக் கடல் பொங்குதே யென்—வாம ரசக்குயிலே
கண்பார்த்திட வொண்ணுதா
பெண் பேதா—இன்னம் வாதா

## பிலோமனாள்.

பத்தினி மாபரியாளே—உன்னை நானே—எண்ணித் தானே
இங்கு-பரதவிக் கின்றேன் விண்ணானே
பந்தன் சருவேசனை நான் நத்தித் தொழுதேன் கற்பை
பாது காப்பது உன்பாரம்—யானும்
சாதித்து நிற்பே னெந்நேரம்

## இராஜன்.

கற்றக் கல்வியெல்லாம் பேசி—கையை வீசி—என்னையேசி
கர்த்தா வென்றாய் விசுவாசி—ஆ ஹா
கார்புவி லெந்தனுக்கு முந்தனுக்கும் யார்நிக ராவார்கள்
கன்னியே வந்தென்னைச் சேரு—நான்
பண்ணினேன் பூஜைகள் பாரு

## பிலோமனாள்.

உத்தம தந்தை நீதானே—உன்—சொந்தமானபுத்ரியானேன்
இந்த-உண்மை யறியாமல் கோனே
பத்தினி சித்தினி யென்றுநீ பித்தனைப்போல் பேசுவது
பஞ்சமா பாதகம் தானே—இந்த
வஞ்சக மாகாது கோனே

### இராஜன்-வசனம்.

கேளாய் பெண்ணே உன்மீது காதலுற்று வெகு நாளாக உனக்காக வழி பார்த்துக்கொண் டிருந்து கடைசியில் என் சம்மதத்திற்கு வசியப்படமாட்டே னென்கிறாய். இப்படி செய்வாயாகில் உன்னை சிறையி லடைத்து வாதனைப்படுத்துவேன் பெண்ணே பத்திரம்.

## பிலோமனாள் கோச்சகம்.

எந்தனை நீ சிறையிலிட்டு யினவதை செய்தபோதும்
அந்தபரன் துணையிருக்க அஞ்சுவேனோ ராஜமன்னா



சிந்தையெல்லா மெந்தன்மிசை சிறப்புடனே வைத்திருக்கும்
அந்தபரன் துணையிருக்க அடியாட்கிங் கென்னகுறை.

### வசனம்.

தேவரீர் என்னை வாதனை செய்தாலும் சர்வேஸ்வரன் கருணையிருக்கும்போது எனக்கு யாதொரு குறைவும் நேரிடாது மகாராஜனே. உனக்கிஷ்டமான கஷ்டங்களை யெல்லாம் நீ நடத்திக் கொள்ளலாம் என்று திட்டமாகச் சொன்னேன் பிரபுவே.

### அரசன் வசனம்.

அடா சேவகர்களே, இந்தக் கன்னிகையின் கைகால்களுக்ு விலங்கிட்டு சீக்கிரம் சிறையில் அடைக்கக்கடவீர்கள்.

### சேவகர் வசனம்.

அப்படியே செய்கிறோம் மகாராஜனே.

### பிலோமனாளைச் சிறைச்சாலையில் சேவகர் அடைத்தபின் புலம்பல்.

(காதலனைப் பிரிந்து—என்கிறமெட்டு, சதாரம்.)

### பல்லவி.

கருணை காரணியே கன்னிகா ரத்தினமே
கதி நீதானே கலங்கிறேன் நானே (கரு)

உனக்கே யானடைக்கலம் உண்மை திரவியமே
கனகாம் பரச்சுடரே கஷ்டத்தில் துணைநீயே (கரு)

கலக்கங்கள் செய்கின்றானே என்கற்புக்கு காவல்நீயே
அலங்கார பொக்கிஷமே அபய மபய மம்மா (கரு)

கைகாலில் விலங்கிட்டு கஷ்டமிகப்படுத்தி
நைகொல் வதைசெய்கின்றான் நானென்செய்வேனே. ()

பொது-வசனம்.

இந்தப் பிரகாரம் பிலோமினாள் துயரப்படுகிறபோது தேவ தாயார் தோன்றி ஆறுதல் சொல்லுகிற விதங் காண்க.

## கட்டளைக் கலிப்பா.

என்னைக் கோரிய வின்ப சிறுமியே
  இப்போது நான் சொல்லுறேன் கேளம்மா
உன்னை நாடி யுகந்துநான் வந்ததால்
  ஊட்டுவேன் சேதி யுண்மையாய் நம்புவாய்
பன்னி யின்னம் பலபா டுனக்குண்டு
  பாவையே பய மின்றித் திடங்கொள்ளு
நன்னய சம்மனசோர் காவலுனக்குண்டு
  நங்கையே மனஞ் சோர்ந்து நீபோகாதே.

இன்னமா கொடு வாதனை வாய்த்திடும்
  எசுவை மறவாதே மனந்தேறு
அன்னவன் செய்த அற்புத மாகோடி
  நாடிய வுன்மன மானதை தேற்றுவார்
புண்ணியக் கட லான சவுந்திரி
  பூமியில் பெருஞ் சாதனை சாதித்தாள்
தண்மையான சுடர் தலங்கிட்டுமே
  தானிதோ சொன்னேன் தைரியங் கொள்வையே.

பொது-வசனம்

இதே பிரகாரம் தேவத் தாயார் பிலோமினாளோடு பேசி தைரியங்கூறிச் சென்றவுடனே அரசன் சிறைக்கூடம்வந்து கன்னியாளைக்கண்டு பேசப்போகிறான். இதற்கு முன் சாத்தான் புகுந்து பிலோமினாளை புத்தி கலைக்கிற விதங் காண்க.



## பேய் வருகிற தரு.

இ-ம், மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

கரியவெண் சடைமுடி படிய சூலத்தை யேந்தும்
பெரிய பேயும் நானே-இவ்வுலகினை சுற்றும்

சரணங்கள்.

கோரைப் பல்லதை நீட்டிக்
  கோழிமுட்டைக் கண்ணைக் காட்டி
பேரைக் குறித்தவர்க்குப் பிரபல முடிசூட்டும்
  பிசகில்லா காட்டேரி—வசமே
    வசிகர வோட்டேரி—துஜமா
  நிசமதை யான்வீசி—யசைமா
      பசிக்க ஆடுகள் வெட்டி
        பகர்ந்தா லதையுங் கூட்டி
      புசிக்க வகையுங் கெட்டி
        பெண்கள் தலையை யாட்டி (கரிய)

உடுக்கை யடித்தெருமை யொன்று வெட்டு மிடமே
  முடுக்காக வந்து அந்த மூகண்டங்களைத் தாமே
முறை, முறை, படி காண்பேன்—கும்பம்
  அறை நெடி சோறுண்பேன்—ஓம்ப
அரை படி கர்ப்பூரம்—லம்ப
  சடுக்கா சக்கரமேலே ஜாடுவே நெருக்காலே
  வெடுக்காய் மலையின்மேலே வீரிட்டுக் கூவுங்காலே (கரிய)

முன்னு லாதாமை யேய்த்தேன்
  முறையா யோபுவையுந் தீர்த்தேன்
சன்னல் தோபியாசையும்
  சாட்டி யென் வேலைதீர்த்தேன்

சரி சரிக்காயினைக் கொன்றேன் — பின்னும்
தற்பரன் முன்னெதிர் நின்றேன்
புரிஜெக நாதனை கண்டேன்
பூட்டி மலையிலேற்றி பூதல மெல்லாங் காட்டி.
ஆட்டி குதிக்க சூட்டி ஆண்மை புரிந்த மேட்டி    கரிப)

பிலோமனாளிடம் பேய் வசனம்.

கேளாய் பிலோமனாளே நீ யேன் விசனப்படுகிறாய். உன் மனக் கவலையை மாற்றி உன்னை சந்தோஷப்படுத்த வந்தேன் என்ன விசனம் சொல்லுவாய்.

பிலோமனாள் வசனம்.

நீ யார் தெரியவில்லையே.

## சேபூல் விருத்தம்

கண்ட கோரண்ட சூரன் கருத்துள்ள வீரனான
புண்டரிக வனசூரன் பிரபல வைராக்ய சேபூல்
பண்டற வந்தே னுந்தன் பரிதாபங் கண்டுயாதே
கொண்டு நான் சொல்லும் புத்தி கோதையே கேட்டிடாயே.

வசனம்.

என்னை நினைத்தவர்களிடமும், நினைக்காதவர்களிடமும் நான். ஆசையாய்ப் போய் அவர்கள் வேலையைமுடிக்கிறவன் நான்மாதே

## பிலோமனாள் விருத்தம்.

ஈடேற்ற வந்தாப்போல வெந்தனை நாடிவந்த
காடேறிக் கண்ணாவுந்தன் கருத்ததை சொல்லவேணும்
மாடேறு சாமியென்னும் மறையதனை சேர்ந்தோனே
ஊடேநீயாரோவுந்தன் ஊரதையறிகிலேனே.

வசனம்.

ஐயா நீ பெந்த னாரானோ உன்னையானறியமாட்டேன் நான் பிறந்தயாமுனக்கெப்படித் தெரியும் ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே.



## சேபூல் பேய் விருத்தம்

நான்வாழும் வன்னிநாடு நல்லவர் படியாதேசம்
மீன்மதி சூரியனும் மினி பெருந்தவஞ் செய்தாலும்
தன்னதையடையமாட்டார் தவறாதென் மொழியைகேட்டா
என்னாளு பந்தநாடு இன்புற சுகிப்பாய் நீயே.    [ல்

வசனம்.

என் னூரை சொல்லுகிறேன் மாதே, பிரகாசமுள்ள அக்கினி பயிராகும் தேசம். அதைப் பார்க்க வேண்டுமென்று சந்திர சூரியர் தவஞ்செய்தாலும் அவர்களுக்குக் கிட்டாது. பூரண சுவாலை, எல்லா தேசத்து ஜனங்களும் அவ்விடத்தில் தாராளமாய் வரலாம். தானம் தவம் நன்மை வேத வைராக்கியர் இவர்களுக்கு அந்த இடம் கிடையாது. சகலமான வாசனைகளும், விதவிதமான பாடல்களும், முப்பத்திரண்டு ராகங்களும், அறுபத்து நான்கு வித ஆட்டங்களும், அவ்விடத்தில் மாறாது நடந்துவரும். அவ்விடத்திலிருந்து வந்து உன்னை ஈடேற்றி கடைசி அந்த யிடத்திற்கு உன்னை யழைத்துக்கொண்டுபோக யிருக்கிறேன் பிலோமனாளே.

பிலோமனாள் வசனம்.

அது வந்த நாடோ எனக்குத் தெரியாது. இருக்கட்டும் இப்போது நீ வந்த காரியமென்ன.

சேபூல் வசனம்.

வந்த காரியமா, இந்த மகாராஜன் நல்ல நீதியரன். இவனை நீ கலியாணம் செய்துக்கொண்டு சுகமாய் வாழவேண்டியது. உனக்கு எல்லா பாக்கியமும் கிடைக்கும். நீ வேண்டாமென்று சொல்லுவது என்ன புத்தி.

### பிலோமனாளுக்கும், சேபூலுக்கும் தர்க்கத் தரு.

இராகம்-செஞ்சுருட்டி அடதாளம்.

பிலோமனாள்.

சொல்லுறாய் யாதோ மெல்லுறாய் வீணாப்
சொல்லுறாய் யாதோ
வல்ல சர்வேசனார் வசனமே யருந்துவேன்
நல்லஎன் கன்னி கற்பு நானவர்க்கு-ஒப்புவித்தேன் (சொ)

சேபூல்.

வீணாக கெட்டுப் போகாதே—பிலோமினா
வீணாக கெட்டுப் போகாதே
தானே வெகு வருத்தம் தங்கை நானெடுத்தேண்டி
ஆன வுந்தனை யந்த யரசன்-மணம்புரிய (வீணா)

பிலோமனாள்.

கேடனே ஜண்டி மாடனே—அடா
கேடனே ஜண்டி மாடனே
வாடா வெனக்குத் துன்பம் வருஷிக்க வந்தவனே [றாய்
தாடைத் தெறித்துப் போகும் தப்பிலிபயலே-கதைசொல்லு

சேபூல்.

மாதேகேள் இப்போதேநான்—சொல்வேன்
மாதேகேள் இப்போதே நான்
மாதே யரசனுன்னை மணந்திடவிடந்தாராய் [கெட்டு
கோதையே மனம் வைத்தான் குறுக்கேபேசாதே-வீணாக

பிலோமனாள்.

எய்க்கிறாய் நரகம் சாய்க்கிறாய்—ஜண்டி
எய்க்கிறாய் நரகம்



ஆய்ந்த வுன்கெருவமெல்லாம்
அடக்குவேன் சேபூலே
ஓய்ந்து யெந்தனைவிட்டு
யொழியடா சண்டாளா-எய்க்கிறாய்.

சேபூல்.

சண்டாளனா யுனக்குபோனனா—நான்
சண்டாளனா யுனக்கு
மண்ணாளராணி யென்று
மகிமைபடுத்த வந்தேன்
துண்டமாயென்னைபேசி
தூறுகிறாயே நான்—சண்டாளனா

பிலோமன்.

அம்மணிதெய்வக் கண்மணி—மதிமிதி
அம்மணிதெய்வக் கண்மணி
செம்மணியாள் பெற்ற
சேசுவி னடிமையென்னை
அம்மியில் வைத்து சும்மா
அரைத்தாலும் பிசகேனே—சொல்லுறாய்

சேபூல.

பிசகென்ன வுனக்கு—ருசியானசுகம் ,
பிசகென்ன வுனக்கு
நிசமாக மவனிடம் நிலைத்துசுகமேபெற
வசமாக செய்துவைப்பேன்
வஞ்சியே மனங்கோணாதே—பிசகென்னா

பிலோமனாள்.

என்னையா ஏமாற்ற வந்தவா—அடா
என்னையா ஏமாற்ற

பன்னிசிலுவை கொண்டு
பாரெல்லாம் ரட்சித்தவர்
அன்னவர் நாமத்தாலே
அகன்றுபோ நீ சேபூலே

சேபூல் வசனம்

அம்மா, நான் அப்படியே போய்விடுகிறேன் கடைசி ஒருவசனம் சொல்லுகிறேன் தாயே உத்திரவு தரவேணுமம்மா.

பிலோமனாள் வசனம்.

என்னடா அலகையே சொல்

## சேபூல் விருத்தம்

என்னிடவார்த்தைக் கேட்டாலீடேறிப்போவாய் பின்னும்
கன்னியமாக நாளுங்கணக்குடன் வந்துவந்து
உன்னிடம் பூசைக்கொள்வேன் உலகத்தில்மதிக்கவைப்பேன்
தன்மைசேர் பிலோமனாளே தளராதுமனதுவையே.

வசனம்.

அம்மா என்வார்த்தையைக் கேட்டால் நீ உலகம் மதிக்கும் சீமாட்டியாகுவாய் நாளும்அடிக்கடி வந்து யாதோ நீகொடுக்கிறப் பூசையைக் கொள்ளுவேன் உனக்குத் துணையாக இருப்பேனம்மா.

பிலோமனாள்-பசாசை சபித்து இடதுகை ஆசீர்வாதத்தால்
துரத்துதல்.

## விருத்தம்.

பன்னிபிந்த சிறைசாலையில் பட்சமாய் காக்குந்தேவா
என்னையேன் சோதிக்கின்றீர் யானுனது தஞ்சமானேன்
நன்னியெனை நாடிவந்த நாகபிசாசே யிந்த
தென்னுமென்றி—துசைபின் தீசாபம் பெற்றுபோவாய்.

ஆ ஆ ச ஓ ரா ரா பே போ கா



**அரசன் பிலோமினாளோடு பேசி ஏசுவை தூஷித்து
தன்னை வதுவை புரியக்கூறல்.**

(உன்னைவிட்டுப்பிரியவில்லை என்கிற மெட்டு—சதாரம்.)

அரசன் தரு.

சுகமாக வாழும்படி சொன்னனடி வீண்குருடி
அகங்கனியாததென்னடி
ஆருனக்கு சொன்னாடி
அன்னமே சொர்ணமே என்னடி. மனங்கொதிப்பு

பிலோமென் தரு

மதிப்பில்லா குதிகுதித்து மரியாதையற்றுநின்று
சதிக்காரா பேசலாமோ சண்டிக்கடாவேபோல்நீ
சண்டாளா சண்டாளா வந்திடே
தீங்குனக்கு

அரசன் தரு.

நீயென்ன வேதங்கற்றாய்
நிஷ்டூரனை ஏசு
மாயனை தெய்வமென்று
மனதிலே பெண்ணிக்கொண்டு
அன்னமே சொர்ணமே
என்னடி மனக்கொதிப்பு.

**அரசன் கோபத்தோடு பிலோமனாளை கட்டியடிக்க உத்திரவிடல்.**

வசனம்.

ஓ சேவகரே இந்த அஞ்சாத நெஞ்சு படைத்தவளை ஒரு ஸ்தம்பத்தில் கட்டி ஆனமட்டும் அடிப்பீர்களாக, புத்தி வரட்டும்.

சேவகர் வசனம்.

அப்படியே செய்கிறோம் அரசனே.

## பிலோமனுளை மரத்தில் கட்டியடித்தல்.

வாராய் நீ ஐண்டிமனுஷீ, இதோ
உன்னை ஸ்தம்பத்தில் கட்டினோம்.

## பிலோமனுள் புலம்பல்.

ஐயோ என் ஆண்டவனே
அனியாய யூதரும்மை
அக்காளையிலே கட்டி அடித்தாரே
அதுபோல் நான் அடியையும் சகிப்பேனே.

## சேவகரும் பிலோமனுளும் ஏசல்.

மசனே பகனேயென்று என்கிற மெட்டு—அரிச்சந்திர விலாசம்.

வீரர் தரு.

அகமதில் கெருவத்தை
அடக்கி நீ வைக்காமல்
அரசன்முன் னெதிர்வாக்கு பேசினாய்
ஜெகமதை மிரட்டிடும் ஜெகஜாலி யுனையிப்போ
சிகை பரங்கட்டி யடிப்போமே.

## பிலோமனுள் தரு

அபரூபம்.

கட்டியென்னைத் தானடித்து
கஷ்டமிக செய்திட்டாலும்
மட்டில்லான் துணையிருப்பார்
மாகொடிய வீரர்களே



வீரர்.

வீரர்கள் சொல் மொழிக்கேட்டுமே—யந்த
விலைமதி லிரீடனை யணந்திடு
பாரிந்தவரசர்க்கு அரசியாய்—நீயும்
பண்பைப்பெருகுவாய் கன்னியே

பிலோமேன்.

கன்னியா ளெந்தனுக்கு
கஷ்டத்தில் துணையிருப்பாள்
பின்னியென்னை வாட்டியிந்த
பிராணனை யெடுத்துகொள்வீர்

வீரர்.

கொள்வதென்ன விந்தமரத்திலே யுன்னைக்
கொடுங் கயற்கட்டித் தானிருக்கிவே
துள்ளி சதைவிழ வடிக்கிறோம்—கெட்ட
துரோகியே சாதனை விடமாட்டாய்

பிலோமேன்.

ஆய்ந்து வினக்குப் புத்திச்சொல்லியும்—உந்தன்
ஆங்கார வாக்கதை நீட்டுறாய்
பாய்ந்து வுதிரமே பெருகிட இதோ
பார் ஜாட்டிக் கசையினுல் வாட்டுறோம்

வீரர்

வாரும் வாருமென்று வானத்தைப்பார்த்திடும்
வஞ்சியே புன்னெஞ்சைப் பஞ்சாக்கி
சிருமாறுடனே சித்ர வதைசெய்வோம்
சிணுங்கியழுகாதே நீவியே.

பிலோமேன்.

வாட்டியெந்த னேசுவைதான்
வஞ்சகரோ வாதித்தார்கள்
நாட்டமுடன் தான்சாதித்த
நல்லவரே யென் துணைவா

பொது-வசனம்.

இந்தப்பிரகாரமாக சேகவர்கள் அரசன் உத்திரவின்படியில் ஓர் ஸ்தம்பத்தில் கட்டி முன்னூறு அடி அடிக்க பிலோமனாள் சோர்ந்து கீழே விழுந்துபோனவுடன் சேகவர் சங்கதியை அரசனிடம் தெரிவித்தார்கள். உடனே அரசன் இக்கன்னிகையை விடாது எடுத்துப்போய் சிறைச்சாலையில் அடைத்து வைக்கும்படியாக உத்திரவு செய்தனர். அப்படியே சிறையிலடைக்க அந்த சிறைச்சாலைக்கு தேவதூதர்கள் வருகிற விதங்காண்க.

## சம்மனசுகள் வருகிற தரு.

வானசம்மனசோர் வந்தாரே—சிறையில்
வானசம்மனசோர் வந்தாரே சிறையில்
ஞானம் வளரும் நங்கைபாலைத்தேடி

கோடிப் பிரகாசம்
குவிந்து படர
ஆடி சதங்கை
அழகாய் ஜொலிக்க

பரிமள வாசம்
படர்ந்து பார்வீச
உரியக் கன்னிகையாள்
உயிரதைக் காக்க (வான)

பிலோமனாள்-வசனம்.

தோத்திரம் தோத்திரம் வானதூதர்களே இந்த அடியாளை தேடிவந்ததால் நான் பாக்கியம் பெற்றேன் என்திரேகமெல்லாம் காயத்தின் வேகத்தால் மெத்தவாதையாக இருக்கிறது வானவர்களே.

வானவர்கள்.

அம்மா உனது விசுவாசம் உன்னை ரட்சிக்கும், மனத்திடமுயிரு பிலோமனாளென்னும் பரிசுத்த நாமம் பெற்றவளே உன்காயத்தை நிமிஷத்தில் ஆற்றும்படியாக வந்தோம். இந்த பரிமளதைலத்தை உன்தேகமெங்கும் பூசினோம், இனிக்காயங்கள் எல்லாம் ஆறி சுகமடைந்து விட்டாய், இன்னும் எத்தனை துன்பங்கள்வந்தாலும் மனஞ்சோராதே பிலோமனாளே நாங்கள்போய் வருகிறோம்.



பிலோமனாள்-வசனம்.

உங்கள் பாதம் துதித்தேன் வானவர்களே.

பொது-வசனம்.

பிலோமனாள் சுகமடைந்து கடவுளை ஜெபித்து வருவதை சிலர் அரசனுக்குத் தெரிவிக்க அரசன் பிலோமனாளை வரவழைத்துப்பார்த்துச் சொல்லுகிற விதங்காண்க.

இராஜன் வசனம்.

சேவகரே, பிலோமனாளை சிறையிலிருந்து கொண்டுவாருங்கள்.

சேவகர்.

ஆண்டவனே இதோ கொண்டுவந்து நிறுத்தினோம்.

இராஜன் தரு.

ஆ ஆ, ஜூபீத்தர் தயவால்—இந்த
அடியுண்ட காயங்கள்
வடுவின்றித் தேறினாய்

சரணங்கள்.

மாதேவன் மகிமையின் ரூபன்
மலாடிநாயன் மங்கை பிரதாபன்
பூவாலஞ்சலி புரிபுகழ் பெருநாமன் ஆ

வசனம்.

உன்னை இத்தனை வருத்தப்படுத்திச் சிறைச்சாலையில் நான் வைத்திருக்க என் இஷ்ட தேவதையாகிய ஜூபீத்தர் உன்மீது

கருணைவைத்து சுகப்படுத்தி விட்டார். ஆகிலும் சந்தோஷமே பிலோமனுளே நான் சொல்லுவதைக்கேள்.

அரசனும்-பிலோமேனுளும்-தர்க்கம்.

(இராகம்-சாமா)

மாந்தளிர் மாமயில் எந்திழையேயென்னை
 மருவிசுகந்தாடி அருள்சிறடி
 துரை நாணடி அடி
மங்கையே மங்கையே உந்தன்
 சங்கையை விட்டு

பிலோமனுள்.

பாரகுருசினில் சீராவுயிர்தந்த
 பத்தாவுக் கடிமை-யென்ன கொடுமை
 சொன்னுய் கொடுமை
பாவி நீ பாவி நீ என்னை
 பதட்டமா பேசாதே

அரசன்.

முத்துநவரத்ன கொத்து மரகத
 முடிந்த வடிவாளே யுன்
 நினைவாலே கனிந்தேனே
முக்கண்ணன் முக்கண்ணன் வந்து
 முற்றுமுனைக் காத்தானே

பிலோமேனுள்.

மண்டை யோட்டில் பிச்சை
 வண்டன் வாங்கியுண்ட
 மானிடன் தெய்வமோ பூசை



செய்வேனே ஆசையுய்வேனே
 வாதுநீ வாதுநீ செய்தால்
 காதகா தகாது

இராஜன்.

என்னைமணந்து கலியாணஞ்செய்திட்டால்
 இஷ்டதெய்வமானே யுனைதானே மதிப்பேனே
என்மானே உருகாதே உருகாதே வுனை
 யுற்றவென நம்படி

பொது-வசனம்.

இந்த பிரகாரம் அரசன் தேவர்களை நிஷிதை சொல்லிபிலோமனுளைதான் வதுவைசெய்து திருமுடிசூட்டி ராஜபத்தினியாக வைக்கிறேன் என்று சொல்லியும் பிலோமனுள் அவனிடத்திற்கு இசைந்து வராமையால் கடுஞ்சினத்தால் வாயில் வந்தபடி இச்சை கேடான வார்த்தைகளை கக்கி தாமதஞ் செய்யாமல் இக்கன்னிகையின் கழுத்தில் ஓர் நங்கூரத்தைக்கட்டி "தைபர்" நதியில் எறிந்துவிடக் கட்டளைக் கொடுக்கிற விதங்காண்க.

இராஜன் விருத்தம்.

எத்தனை சொன்னாலுமிந்த
 இரும்பான நெஞ்சுடையாள்
நத்தி யென்னை சுகமடைய
 நாடாததாலே காவலுத்த
பத்தியில் மிகுத்தாள் தன்னை
 பற்றியே பிடித்து கெட்டி
வைத்து நங்கூரங் கட்டி
 வதை, தைபர் நதியில்தானே.

139922
600 008

வசனம்.

இந்த மஹாகொடிய சண்டாளி ஈர்வாக்கியத்தை மீறி பேசி கிருஷ்ண பகவானையும் ஏளனம் பேசுகிறபடியால் இவள் கழுத்தில் நங்கூரத்தை மாட்டி தைபர் நதியில் எறிந்து விடுங்கள் சேவகர்களே.

சேவகர் வசனம்.

இதோ செய்கிறோம், கப்பற்காரனை கூப்பிடுகிறோம்.

பதம்.

தங்ககுடங்கொண்டு மங்கை சீதாதேவி தண்ணீர்க்குப் போறாளே
என்கிற மெட்டு (குசேல நாடகம்)

மங்கையே உந்தனை
செங்கடல் தள்ளிட
மன்ன னுரைத்தாரே

பொங்கார வேந்தனய்அ
கங்கார காரியே
கக்குல் படைவைத்தவளே
யக்கேயா சாகப் போறாய்

ஏகவுலகத்துக்கான சக்ராதிபர்
இவரை மணமுடித்துக் கொண்டால்
கௌரவ மில்லையோடி
சாகதுணிந்திட்ட சண்டாளியே புத்தி
சாதித்து சாதித்து போதித்துங் கேளாயே

---

சேவகர் கப்பற்காரனை அழைத்தல்.

வசனம்.

திபேரியாக்கடலில் கப்பல் விடும் கப்பித்தானே, இதோ இந்த மனுஷியை கழுத்தில் நங்கூரங்கட்டி நடுக்கடலில் தள்ளி விடுவீராக. இது அரசன் கட்டளையாகும்.



கப்பற்காரன் வசனம்.

இதோ அப்படியேசெய்கிறேன் சேவகரே,

கப்பற்காரன் பதம்.

திபேரியாக்கடலில் கப்பல் செலுத்தும் கப்பித்தான் நானே
உபாயமாக தண்ணீரோட்டம்-காற்று வாட்டம் ஆழம் நீட்டம்
உளவு கண்டு கப்பலோட்டும் உயர்ந்த கப்பித்தான் நானே.

கப்பித்தான் வசனம்.

ஓ சேய்லர்களே (எஸ் ஸார் ஆல் ரைட்ஸார்) கப்பல்பாய்மரத்தைத்தூக்குங்கள், காற்று வலியுங்கள், இதோ இந்த கன்னிகையை கப்பலில் தூக்கிப்போடுங்கள்.

சேய்லர்கள் வசனம்.

இதோ அப்படியேசெய்கிறோம் துரையே.

சேய்லர்கள் பிலோமனாளை கப்பலிலேற்றுதல்.

வாடியம்மா இளம்பெண்ணே! உனக்கேனிந்த கேடு, கப்பலிலேறு.

பிலோமனாள் - அகவல்.

ஒன்றான மெய்பொருளே
உறுதியாய் மனதில் வைத்தேன்
இன்றென்னைக் காக்கவேண்டும்
இனிய சருவேசா

என்மனஞ் சோராமல்
என்றும் நடத்திடுவாய்
மன்னவர் முடியிறக்கும்
மாவீரக் கோனே

இன்னமெத்தனை நாள்
இவ்வாதை யெந்தனுக்கு
கன்னியுன் பாதம் நான்வரச் செய்யும்
சென்னிநின் பதமே சீர்பெறச் செய்வீர்

கப்பற்காரனும் பிலோமனாளும்.

பிலோமன்—ஜம்பை.

ஒளிகடலை கையமர்த்தி உம் தோழர்களை காத்த
மகிதனைவாரியே உமது மலரடிக்கே சரணம்.

கப்பற்காரன் தரு.

வீணாக என் பெண்மணே—வீம்புகள் பாராட்டி
விடுகிறாய் உன்னுயிர் தானே—யானை
தானாக மண்ணைத் தலைமேல் போட்டுக்கொள்ளும்
சரிதைபோலாச்சுதே மானே.

பிலோமன்—ஜம்பை.

நோயனையே பெருஞ்சலத்தில் நின்று ரக்ஷைசெய்து
கோம்வைத்த ததுபோல—விமலா நீகாரும்.

கப்பித்தான்-தரு.

காத்திரக்ஷிக்கும் அரசனைவிட்டு காணுசாமியை அழைத்துநீ
நேத்தியான உன்னுயிரைமாய்க்கிறாய்-விர்மூடப்பெண்ணே களைத்து

பிலோமேனாள்-திபதை.

சாகரத்தில்மாள ஏகமனங்கொண்டேன்
சதிவீரரே செய்யுங்களுங்கள்வேலை
ஏகபரனெழுதிவைப்பார் கணக்கு
எல்லோருமெதிர் நின்று சொல்லுவேனே

கப்பித்தான்-வசனம்.

இதோ நடுக்கடலில் வந்தோம் சேவகர்களே (ஆஜர்) இந்தக் கன்னிகையின் கழுத்தில் நங்கூரத்தைக் கட்டுங்கள்; கட்டி தொபாலென்று தள்ளிப் போடுங்கள்.

சேவகர்கள்-வசனம்.

இதோ நங்கூரத்தைக் கட்டிவிட்டோம்.



பிலோமேனாள் வேண்டுதல்-புலம்பல்.

ஆண்டவனே என்னையிதோ ஆழமான நடுக்கடலில்
நீண்டசங்கிலி நங்கூரம்மாட்டி நிமிஷத்தில் தள்ளப்போறார்
பாவிகட் கடைக்கலமே பரிசுத்த கன்னிகையே
தாவியுந்தனடைக்கலமானேன் தாபரித்திடுவாயே
எந்தனாத்துமம் உந்தன்மடியில் இன்பமாய் சுகித்திடவும்
இந்நேரமே ஏற்றுக்கொள்ளவும் ஏசு ரக்ஷகன் தாயே.
உலகிலே எந்தன் பேர்சொல்வோர்கட் குற்றபிணிகள்தீர
பலபொய் மதங்களழிந்து சத்திய பரிசுத்த மறைபோங்க
கர்பஸ்திரிகள் என்னைவேண்டினால் கஷ்டம் நீங்கியேசுகமாய்
நற்படிபெற தெய்வமேவரம் தந்தருவாயெந்த நாளும்.
பஞ்சமபடை நோயுலகில் பற்றிடாமலே செழிக்க
கெஞ்சுகின்ற என் மன்றாட்டை கேட்டருளும் ஸ்வாமி

பொது-வசனம்.

இந்தப் பிரகாரம் சேவகர் மெத்த வருத்தப்படுத்தி தைபர் நதியில் கொண்டுவந்து பலாத்காரமாக தள்ளினவுடனே பிலோமனாள் கடவுளை நினைந்து ஜெபிக்க உடனே இரண்டு சம்மனசுகள் வந்து காப்பாற்றிய விதங்காண்க.

இரண்டு சம்மனசுகள் வசனம்

கன்னிகாரத்னமாகிய பிலோமேனாளே அஞ்சாதே! இதோ உன்னை நடுக்கடலிலிருந்து எடுத்து கரைசேர்க்க சர்வேஸ்வரன் எங்களை அனுப்பினார், கரையில் சேர்த்திட்டோம் இன்னும் எந்த வாதையிலும் திடன்கொண்டிரு

பிலோமேன் திபதை.

ஆண்டவனின் தூதர்களை அடியாள் நமஸ்கரித்தேன்
மீண்டும் எனக்குதுணை நிகழிருக்க வேணுமின்றே

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் பிலோமனாள் துதிசெய்தவுடன் தேவதூதர்கள் வந்தடித்துப் பிலோமனாள் கழுத்தில் இருந்த நங்கூரத்தை,

யுடைத்துக் கரைசேர்த்தார்கள். இந்த சங்கதியை கேள்வியுற்ற அரசன் இவள் மந்திரகாரியென்றும் சூனியங்கற்றவளென்றும் தீர்மானித்து இக்கன்னியை ரோமநகர் தெருமுற்றும் கோலஞ் செய்யவைத்து கடைசியில் அம்புகளால் எய்து கொல்லும்படி சேவகர்களுக்கு உத்திரவு செய்தான்.

(இத்தனி சோமோடி என்கிற மெட்டு.)

## இராஜன் தரு.

வாருங்கள் வீரசூரரே—இவளைக்கொண்டு
  வாதனையம்பாலே யெய்து
அகத்தின் கெர்வத்தைக் கொய்வீர்

வசனம்.

ஆ ஆ வீரர்களே இனி நீங்கள் இரக்கமென்பதைக் கிஞ்சிற்றும் பார்க்க வேண்டாம்.

அநுபல்லவி.

பாருங்க ளிவளைதான்
பகர்ஜாலங் கற்றவளை
நேருடன் கண்ணால் கண்டேன்
நிமையின் பொழுதிலேதான். (பா)

சரணங்கள்.

இந்திரஜாலக்காரி மலையாளத்திலு
  ளத்துகள் தெரிந்தவரி
அந்த தேவர்களை ஆட்டியசக்கிடுவாள்
  ஆனாலிவளைப்போல் ஆங்காரிகண்டதில்லை. (பா)

வசனம்.

அதோ வாருங்கள் வீரர்களே இந்த பிலோமனாள் என்பவளை முன்பின் பார்க்காமல் அம்பினால் எய்து கொல்லுவீரப்பா சூரர்களே.

சேவகர் அம்பாலெய்தல்-வசனம்.

பிலோமேனாளே வா, கம்பத்தில் கட்டினோம் அம்புகளை எறிகிறோம்.



சேவகர் அம்பாலெய்யும்போது பிலோமேனாள்—புலம்பல்.

எழுவியாகுல அம்மை இருதயத்தில் தரித்த
  ஏகபரனின் தாயே—இந்த
பாழும் உடலினிலே அம்புகள் மேலப்பு
  பட்டுருவுந்த தாயே.

அர்ச்சய சிஷ்டசெபஸ்தியாரே நீர்
  அம்புகளல்லவைதக்கும்—ஏக
ரக்ஷகரின் ஐந்துகாயத்திற் கொப்பிட்டவர்
  அதுபோல் திடன்தாரும்

உலகஆசாபாசம் யாவற்றையும் வெறுத்து
  ஒருமனம் கொண்டேனே—இந்த
நிலையிலேயே நான்மாண்டு பரலோகத்தின்
  நேர்மைபெறச் செய்வீரே.

சேவகர் வசனம்.

என்னடா அண்ணமாரே, நாம் எறிகிற அம்புகளானது நம் மேற்திரும்பிக்கொண்டு பாய்ந்தே! இதென்னமோ மகத்துவமடா!

சேவகர்-வசனம்.

அம்மா தாயே! தேவமகத்துவம் பொருந்தியவளே! உன்பாதம் முத்தமிடுகிறோம் நாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும், உமது தெய்வம் மெய்யான தெய்வம், அந்தமார்க்கத்தில் இன்றைக்கே சேர்ந்து கொள்ளுகிறோம் அம்மணி!

பிலோமனாள் வசனம்.

ஆம் என் சகோதரர்களே என் தெய்வம் மெய்யானது, நீங்கள் தெரியாமல் எனக்கு செய்த குற்றங்களை மன்னித்துக்கொண்டேன் இப்பொழுது உங்களுக்கு ஞானதீக்ஷை கொடுக்கிறேன் பெற்றுக் கொள்ளுங்கள்.

சேவகர் வசனம்.

இதோ அடிபணிந்து ஞானதீக்ஷை பெற்றுக் கொள்ளுகிறோம் தாயே.

பிலோமேன் இருசேவகருக்கு ஞானஸ்நானம் தந்து பேரிடல்-ஓரிசம்.

ஆதிபிதாச்சுதனிஸ் பரீத்தசாந்து
அரியதிருநாமத்தால் ஞானதீக்ஷை
வேதபடி உன்பேர் ராயப்பனாகும்
விளங்கவே உன்பேர் சின்னப்பனாகும்

பொது வசனம்.

இந்தப்படியாக இரண்டு சேவகர் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு வனாந்திரபோயிற்றாக்கள்.

பொது.

இந்த உத்திரவு பிரகாரம் சேவகர்கள் பிலோமனுளை அம்பி னால்சின்னாபின்னப் படுத்தியும் தெய்வசெயலால் அந்தம்மாளுக்கு ஒருதீங்கும் நேரிடாமல் அந்த அம்பானது எய்தவர்களையே திருப் பிக்கொண்டதை கண்டு ஊர் அலங்கோலப்படவும் இவளை கொல் லாவிட்டால் தன்னுயிருக்கே சேதம்வரும் போலிருக்கிறதென அரசன் பயந்து கடைசியில் இவள் சிரசைக் கொய்துவிட உத்தி ரவுகொடுக்கிற விதங்காண்க.

## இராஜன் விருத்தம்

சண்டாள பெண்ணாள் தன்னை சந்தித்து கெடுதல்கொண்டேன்
துண்டாக இவள்சிரசை துடிப்புடன் மடக்கிவெட்டி
அண்டாது தணலை மூட்டி அதோ கெதியாக்கிவிட்டு
கொண்டாடித்துகொண்டு கூறுவீர் வீரர்மாரே

வசனம்.

இவள் சிரசை இரண்டு துண்டுசெய்து விடுவீர்களப்பா சே வகர்களே.



சேவகர்-கண்ணிகள்.

நூசைமுனி ஆசீர்வாதம்—என்கிறமெட்டு.

உந்தன்வாக்கை மீறுதுதானே
உடனே சிரசைகொய்யுவே
பந்தமொழிக் கிடையாதினி
பட்டிபாளை செய்வேனினி
நாவினாலே பந்தக்கட்டி
நவின்றே வேதங்காட்டி
பூவிலம்புதன்னால் வாட்டிப்
பொழிந்து பார்த்தோம் வசியாட்டி

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் பிலோமனுளை அழைத்துக்கொண்டு வந்து நிறுத்தி இனிவெட்ட எத்தனிக்கும் போது,

பிலோமனாள் வேண்டுதல்.

சந்தம்-இரங்கலோசை

ஆபிலக்ஷண அநாதிரக்ஷகனே, ஆரணா கருணைவாரணா
அடிமைகட் கடிமையாகுமோர் சிறிய-அடியாள் நானிங்கு திடனுடன்
கூறும் வேண்டுதலைகேட்டுமே அருள்-கூறவேண்டுமேது என்னெனில்
குறைபடர்ந்த இவ்வுலக ஆசையது கொஞ்சமேனும் நான் வைத்திலேன்
றேபோல் மோகவெறிபிடித்தரசன் இன்னமும் எனைவதைக்கவும்
என்விதிக்கிறீர் இதே கதியினால் எளியாள் என்சிரசு அறுபட
நாறுமென்னுடலை பீறிமாய்த்திடினும் நற்கதிப்பெற என்னாத்துமம்
நல்குவாய் மரணம் என்கழுத்தை யிதோ காட்டமோடு மிகசாய்த்தேனே.

சம்மனசு-பிலோமேனாளுக்கு-முடிசூட்டல்.

பிலோமெனுளே என்னோடு இன்று நீபரலோகத்திற் வந்து விடக்கடவாய், இதோ பரலோகத்தின் முடி உனக்கு சூட்டப் பட்டது.

சேவகர்-வெட்டுதல்-பதம்.

கத்தியெடுத்தே யிதோகாணே யாடினோம்
புத்திக்கெட்ட வனிந்த பூவையாளைதான்
ராஜபோகத்தைதள்ளி ரோசமாகவே

ஏசல்கொண்டாளே இதோரெண்டு துண்டமாய்
எத்தனை வாதைபட்டுக்கிடந்தோம் நாமும்
சித்தமாய் கொண்டுகமை ஜெயித்துவந்தாளே

பொது.

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரம் சேவகர்கள் பிலோமனாளின் சிரசை துண்டித்து விட்டார்கள். வானலோகத்திலே பிலோமேனாளின் ஆத்துமத்தை சம்மனசுகள் வாழ்த்துகிறார்கள். ஆகையால் யாவரும் இந்த அழகிய சரித்திரத்தை கொண்டாடி ஒருமங்களம் கூறுவோம்.

(குசலன் நாடகம் புத்திரருக்குப் பேரிடவேண்டும் என்கிற மெட்டு)

## மங்களம்.

மங்களம் மங்களமே—சதா திரித்வனுக்கு
மங்களம் மங்களமே சதா

அநுபல்லவி.

எங்குமே நிறைந்தவருக்கும்
எழில்சூசை மாமரிக்கும் (மங்)

சரணங்கள்.

வானதூதர் யாவருக்கும்
ஆர்ச்சிய சிஷ்டர்கட்கும்
மோன விசுவாசியருக்கும்
முத்து சத்தியவேதத்திற்கும் (மங்)

கற்றறிந்த பெரியோருக்கும்
கன்னியாஸ்திரி குருமாருக்கும்
உற்றபாப்பு மேற்றாணிக்கும்
உன்னித பிலோமனுட்கும் (மங்)

முற்றிற்று

139922

## நாடக புஸ்தகங்கள்.

அடியிற்கண்ட புஸ்தகங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| அர்ச். ஸ்நாபக அருளப்பர் (டிராமா) | 0 6 0 |
| அர்ச். மரிசிருதம்மாள் (டிராமா) | 0 6 0 |
| தோப்பியாஸ் (டிராமா) | 0 6 0 |
| கித்தேரியம்மாள் (டிராமா) | 0 6 0 |
| கோதுகப்தான் விரிசித்தம்மாள் (டிராமா) | 0 6 0 |
| சூசானம்மாள் (டிராமா) | 0 6 0 |
| அர்ச். அந்தோனியார் (டிராமா) | 0 6 0 |
| யூதித்தம்மாள் (டிராமா) | 0 6 0 |
| அக்னேஸம்மாள் (டிராமா) | 0 6 0 |

விலாசம்:—

மஹா விகட தூதன் ஆபீஸ்,

சென்னை.